1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 9-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு பங்குனிமாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## யூதாசின் அவநம்பிக்கை

திருஇருதய சபையைச்சேர்ந்த யோசெபா மெனென்டெஸ் எனும் பரிசுத்த கன்னிகாஸ்திரிக்கு நமது ஆண்டவர் அருளியகாட்சி ஒன்றின் போது வெளிப்படுத்தியது.

ஒலிவமரத்தோப்பில் என்னை எதிரிகளிடம் காட்டிக்கொடுத்த பிற்பாடு, யூதாஸ் சுற்றித்திரிந்தான்; அவன் செய்த மிகப் பெரும் தேவதுரோகம் அவனுடைய மனச்சாட்சியை உபாதித்தது; நான் மரணத்துக்குத் தீர்ப்பிடப்பட்டேனென அவன் கேள்விப்பட்டதும், அவநம்பிக்கைக்குள்ளாகி நான்றுகொண்டு செத்தான்.

நான் நேசித்து நெடுநாள் படிப்பித்துவந்த இந்த ஆத்துமத்தை நான்பார்த்ததும் என் இருதயம் பட்டதுயரத்தை யாரால் அளவிடமுடியும்? அவன் என்போதனைகளை ஏற்றுக்கொண்ட அவன்—மிகப் பெரிய அக்கிரமங்களுக்கும் நான் மன்னிப்புக் கொடுத்ததை என்வாயிலிருந்தே கேட்டிருந்த அவன், கடைசியாகத் தன்னை நித்தியகேட்டுக்குள் வீழ்த்திக் கொண்டான்.

ஆ, யூதாஸ், நீ வந்து என் பாதத்தில் ஏன் விழவில்லை? உனக்கும் நான் மன்னிப்புக் கொடுத்திருப்பேனே! என்னைச் சுற்றியிருந்தகூட்டம் கோபத்துடன் கூவிக்கொண்டிருந்தமையால் நீ என்னிடம்வரப் பயப்படுகிறதாயிருந்தால், என்னைப் பார்க்கக்கூடாதா? .... என்கண்கள் உன்கண்களைச் சந்திக்கும்.

பாவத்தில்மூழ்கி, உங்கள் பாவங்களை முன்னிட்டு என்னைப்பிரிந்து நெடுநாளோ அல்லது சொற்பநாளோ அலைந்து திரிகிறவர்களே! நீங்கள் செய்துள்ளபாவங்கள் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் குருடாக்கியிருக்குமானல், உங்களுடைய ஆசாபாசம் ஒன்றையே திருப்திப்படுத்தும்படி பாவப் பாதையில் விழுந்துவிட்டீர்களானல்—நீங்கள் பாவத்திலவிழக் காரணமாயிருந்தவர்கள் அல்லது உங்களுடன் பாவம்செய்தவர்கள் உங்களைக்கைவிட்டுவிட்டால், உங்கள் ஆத்துமஸ்திதியை நீங்கள் உணரும்பொழுது, ஓ அப்பொழுது அவநம்பிக்கைக்கு இடங்கொடாதேயுங்கள். ஏனெனில், உயிர்இருக்கும்வரை ஒருவன் இரக்கத்தினிடம் சென்றுமன்னிப்புக்கேட்கலாம்.

நீ இன்னும் வாலிபவயதினனாயிருந்தால், உன்வாழ்க்கையில் நீ காண்பித்துள்ள தர்மாதிரிகைகளால் நீ உலகத்தின் மதிப்பை இழந்துபோனல், பயப்படாதே. உன்னைக் குற்றவாளியாகத் தீர்ப்பிட்டுக் குற்றவாளிபோல் நடத்தி நிந்தித்துத் தள்ளிவிடக் காரணமிருந்தபோதிலும், நீ நரகஅக்கினிக்குள் விழ உன் கடவுள் விரும்புவதில்லை.

உன்னை அணுகி உன்னைமன்னிக்க அவர் வெகுஆசையாயிருக்கிறார். நீ அவரருகிற்செல்ல துணியாவிட்டால் உன் இருதயத்தின் பெருமூச்சுகளாவது அவரை அணுகும்படிவிடு. உடனே தகப்பனை அவருடைய கரங்கள் மன்னிப்பினுடையவும், சீவியத்தினுடையவும் ஊற்றண்டை உன்னை இட்டுச்செல்லும்படி நீட்டப்பட்டிருப்பதைக் காண்பாய்.

உன் வாழ்க்கையின் பெரும் பாகத்தைப் பாவத்திலும், அசதியிலும் செலவழித்து, திடீரென மரணம்வந்து உன்னை அவநம்பிக்கைக்குள்ளாக்கி, உன்கண்களை நித்தியத்துக்கும் மூடப்போவதாகப் பயப்படுத்துகையில், நீ அவநம்பிக்கைக்குள்ளாகும்படி உன்னை விட்டுவிடாதே. வாழ்க்கையில் இன்னும் ஒரு விநாடி மாத்திரமே உனக்கு இருந்தபோதிலும், மன்னிப்புக்கு இன்னும் நேரம் இருக்கிறது. இதுநிச்சயம். அந்த ஒரு விநாடியில் நித்தியசீவியத்தை நீ திரும்ப விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

உன் வாழ்நாள் முழுவதையுமே நீ அறியாமையிலும் தப்பிதங்களிலும் செலவழித்திருப்பாயானல், மற்றமனிதர்களுக்கும், சமூகத்துக்கும், மதத்துக்குமே பெருந்தீமையின் காரணமாக நீ இருந்திருப்பாயானல், உன் ஆத்துமத்தின் நிலையையும், உன் தப்பிதத்தையும் நீ அறிய வருவாயானல், உன்பாவங்களும், நீ இழைத்த தீமைகளும் உன்னை நசுக்கவிடாதே; ஆனல், ஆழ்ந்த மனஸ்தாபம்நிறைந்த இருதயத்துடன், நம்பிக்கை என்னும் ஊற்றில் உன்னை எறிந்துவிடு, உன்னை மன்னிக்கும்படி உன் வரவை எதிர்பார்த்திருப்பவரிடம் விரைந்துசெல்.

உன் நிர்ப்பாக்கியத்தையும், தவறுதல்களையும் பற்றிய வரலாற்றை முழுநம்பிக்கையுடன் திறந்துசொல். என்வார்த்தைகளுக்கு வணக்கத்துடன் செவிகொடு. கடந்தகாலத்தைப்பற்றிப் பயப்படாதே. என்நேசம், இரக்கம் என்னும் அலைகளினல் உன்பழைய பாவங்கள் யாவும் மூடப்பட்டுவிட்டன. நீ தாழ்ச்சியுள்ளவனயிருக்க உன்பழைய பாவங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும். உன் பேறுபலனை அதிகரிக்கும். உன் நேசத்துக்குச் சிறந்தஅத்தாட்சி காண்பிக்க நீ விரும்புவாயானல், நான் மன்னித்து விட்டேனெனவும், உன் பாவங்கள் ஒருபோதும் என் இரக்கத்துக்குச் சமமாகாஎன்றும் நம்பு. ஏனெனில், என் நேசமும் இரக்கமும் அளவற்றன. யோசெபா, என்நேசம் என்னும் ஆழியில் நீ மறைந்திரு. மற்றஆத்துமங்களும் உன்னைப்போல் உணரும்படிபிரார்த்திப்பாயாக.

"அன்பின் அருங்குரல்"

## தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின் தபசுகால நிருபம்

(முன்தொடர்ச்சி)

### புனிதஜூபிலி வருஷம்

சென்றவருஷம் உரோமைமாநகருக்குத் திருயாத்திரையாகச் சென்று ஜூபிலிப்பலனை அடைந்தவர்கள் 40 இலட்சத்துக்கு அதிகமானவர்கள். இவர்கள் அங்கு சென்று நியமிக்கப்பட்ட நான்குமகாஆலயங்களைச் சந்தித்து, நல்லபாவசங்கீர்த்தனம்செய்து, திவ்வியநற்கருணை உட்கொண்டு, குறிக்கப்பட்ட செபங்களைச் செபித்து, ஜூபிலிப் பலனை அடைந்து, பரிசுத்த பாப்பரசரைத் தரிசித்து உள்ளம்பூரித்து, தத்தம்சொந்த நாடுகளுக்குத் திரும்பிவந்து, தாங்கள் கண்டதையும், கேட்டதையும், அனுபவித்த சந்தோஷங்களையும் வார்த்தையினலும், அச்சுப்பிரசுரங்களினலும் அறிவித்தது யாவரும் அறிந்தவிஷயமே.

உரோமைமா நகருக்குச்செல்லாதவர்களோ நமக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையேயென்று வருந்துவது ஆச்சரியமல்ல. ஆனல், இப்பேர்ப்பட்டவர்கள் வருந்தத்தேவையில்லை. இவர்கள் அனைவருக்கும் சுபசெய்தி என்னவென்ருல், இந்த வருஷம் பணம்செலவழித்துப் பல்லாயிரம்மைல் கடல்கடந்து போகாமல் நம்முடைய உள்ளூரிலிருந்துதானே இதே ஜூபிலிப் பலனை அடைய நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. அதெப்படியெனில், தற்போது திருச்சபையை மகிமைப்பிரதாபத்துடன் ஆண்டுநடாத்திவரும் பரிசுத்த பிதா 12-ம் பத்திநாதர் சென்ற மார்கழிமாதம்விடுத்த நிருபத்தின்வாயிலாக அகிலஉலகமும் இந்தவருஷம் ஜூபிலிப்பலனை அடையலாமென்று பரிவுடன் பிரஸ்தாபித்திருக்கின்ருர். இந்த ஜூபிலி வருஷம் 1951-ம் வருஷம் தைமாதம் முதல் தேதி துவக்கி, மார்கழிமாதம் 31-ம் தேதிவரை நீடித்திருக்கும். பரிசுத்தபிதா விடுத்த நிருபத்தில் சகல மேற்றிராணிமார்களையும் கேட்கிறதென்னவெனில், ஒவ்வொரு குடும்பத்திலும், சமூகத்திலும், தேசத்திலும், அகிலஉலகிலும் நீடியநிரந்தரமான சமாதானம் நிலவவும், வேதகலாபனையால் வேதசாட்சிகளைப்போல உபாதிக்கப்படுகிறவர்களுக்குத் திடனும் தைரியமும் கொடுக்கவும், தங்கள் மேற்றிராசனங்களில் பொதுத்தியானம், உட்தியானம், விசேஷ செபதபங்கள் ஏற்படுத்தவும், கிறீஸ்துவகுடும்பங்களின் ஞான நன்மைகள் அதிகரிக்கவும், சகலகிறீஸ்துவர்களும் ஒற்றுமையுடனும் சகோதர பாந்துவத்துடனும் சீவிக்கவும், சத்தியமறை ஜெயம் பெறவும் இந்தப் புனித வருஷத்தில் வேண்டிக்கொள்ளத் தூண்டவேண்டுமென்பதே. ஒரேவார்த்தையில் இந்தப்புனித வருஷத்தில் சகலமனிதரும் சர்வேசுரன் பாதம்வந்து சேரவேண்டும்.

### ஜூபிலிப்பலனை அடைய நிபந்தனைகள்

(1) ஜூபிலிப்பலனை அடைய விரும்பும் ஒவ்வொரு தடவையும் பாவசங்கீர்த்தனம்செய்து திவ்வியநன்மை வாங்கவேண்டும்.

(2) ஒரேஊரில் நாலுகோவில்கள் இருந்தால், நாலு கோவில்களையும் சந்திக்கிறது அவசரம். ஒரேஒரு கோவில்மாத்திரம் இருக்கிற ஊர்களில் அதேகோ

( தொடர்ச்சி 8-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது முத்திப்பேறுபட்டம்

1900-ம்ஆண்டு சீனவிலே பொக்ஷரது கலகத்தின்போது, சீனரின் கூட்டமொன்ருல் அடிக்கவும், பின்னர்கொல்லவும்பட்ட ஓர்கத்தோலிக்க மிஷனரியகுருவானவர் அர்ச்சியசிஷ்டபட்டத்தின் முதற்படியாக, அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே சென்ற 18-ந்திகதி நடந்தேறிய ஆடம்பரமற்ற திருவைபவம்ஒன்றில்முத்திப்பேறுபட்டஞ் சூட்டப்படலாயினரென வத்திக்கானிலிருந்துதந்திச்சமாச்சாரம்எட்டியிருக்கிறது. அத்திருவைபவத்திலே பன்னிரண்டாம் பத்திநாதபாப்பரசர் தலைமைவகித்து, இவ்வருடத்திலே முத்திப்பேறுபட்டஞ் சூட்டப்பெற்ற முதலாவது சுத்தவாளரான ஆசா. அல்பெறிக்கோ கிறெசிற்ருலி எனும் குருவானவருக்குத் தமது வணக்கவழிபாட்டைச் சமர்ப்பித்துநின்ருர். இந்தப்பரிசுத்த குருவானவர் பொக்ஷரது கலாபனையின்போது ஓர் கூட்டஞ் சீனரால் உடைகளைந்து, ஓர் தம்பத்துடன் கட்டிஅடிக்கப்பெற்று, இரவுமுழுதும் அந்தப்படியே விடப்பட்டிருந்தார். மறுநாட்காலை அவரது சிரம் வெட்டப்பட்டு, உடலும்கண்டதுண்டஞ் செய்யப்படலாயிற்று. இவர் மிலான்நகரிலுள்ள பிறதேசவேதபோதக மிஷன்சபையைச் சேர்ந்தவர். இந்தச்சபை தான்ஸ்தாபகமான நூற்ருண்டு விழாவையும், மகிமைவாய்ந்த தனது புதல்வர்களில் ஒருவராகிய முத். அல்பெறிக்கோ கிறெசிற்ருலிசுவாமியார் சீனவில் வேதசாட்சியான ஐம்பதாவது வருடநிறைவு விழாவையும் இவ்வாண்டிலே கொண்டாடுகின்றது. இவர் சென்ற 1950-ம் ஆண்டு பங்குனிமாதம் 5-ந்திகதியன்று உண்மையாகவே ஓர் வேதசாட்சியென ஒப்புக்கொள்ளப் பெற்றிருந்தார். சென்ற புரட்டாசிமாதம் 3-ந்திகதி கருதினல் மிக்காரு ஆண்டவர்பரிசுத்த பிதாவின் பேட்டி பெற்றபோது, முத்திப்பேறுபட்டஞ்சூட்டுந் தினம் 1951-ம்ஆண்டு மாசிமாதம் 18-ந்திகதியெனப் பாப்பரசரால் குறிக்கப்படலாயிற்று.

### நான்காம் நூற்றண்டுவிழா

இந்திய திருச்சபைச் சரித்திரத்திலே அடுத்துநிகழும் 1952-ம்ஆண்டு நிகழவிருக்கின்ற இருபெரிய நூற்ருண்டுவிழாக்களைத் தகுந்தவாறு கொண்டாடுதற்கான ஆயத்தங்கள் ஏலவே நடைபெறத் தொடங்கிவிட்டன. இவற்றில்ஒன்று, அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்தியாவுக்குவந்த பத்தொன்பதாம் நூற்ருண்டுவிழாவாகும். மற்றது, அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதமடைந்த நான்காம் நூற்ருண்டு விழாவாகும். அர்ச். சவேரியாரின் அழியாத்திருமேனி பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிற கோவைநகரிலே இந்த நூற்ருண்டுவிழாவைமுன்னிட்டு, அத்திருமேனியைக் காட்சிக்கு வைக்கும் ஒழுங்குகளை அரசினரும், திருச்சபை அதிகாரிகளும் செய்துவருகின்ருர்கள். பழைய கோவைநகரிலே யாத்திரை விடுதிஒன்றை அமைப்பதற்கான இடத்தைக் கவர்னர்-ஜெனறல் சமீபத்திலே அனுமதித்திருக்கின்ருர். இந்த இடம் பொம்யேசு மகாலயத்துக்கு அண்மையில் இருக்கின்றது. அர்ச். சவேரியாரின் பூசிததிருசேத்திரமாகிய இந்தமகாலயத்திலே அடுத்தவருடம் அவர் திருமேனி காட்சிக்கு வைக்கப்படும்போது பெருந்திரளான யாத்திரிகர்கள் அதனைத் தரிசிப்பார்களென் எதிர்பார்க்கப்படுகிறது.

### கன்னிகாபதவி தேடியமாது

மரியே ஷார்க்கிளனும் மாது சக்கிராதிபத்திய பந்தையவிளையாட்டுப்போட்டியிலே கலந்துகொள்ளுமாறு 1938-ம்ஆண்டு கனடிய நீந்தற்பந்தைய விளையாட்டுக்கோஷ்டியில் ஓர்ஆளாகச்சேர்ந்துஆஸ்திறேலியாவைத் தரிசித்தாள். பின்னர் பந்தைய விளையாட்டுகள்முடிந்து திரும்பும்போது, திரும்பவும் ஆஸ்திறேலியாவுக்கு வருவதாக விருப்புக்காட்டிப் போயிருந்தாள். சமீபத்திலே அவள் தனதுவிருப்பைப்பூர்த்திசெய்து ஆஸ்திறேலியாவுக்குத் திரும்பிவந்தாள். ஆனல், இம்முறை அவள் சர்வதேச நீந்தற்பந்தையப் போட்டியிலே வெற்றிபெற்றுப் பிரஸ்தாபம்அடைவதைத் தேடிவரவில்லை. ஆனல், ரேய்றாக்கி எனுமிடத்திலே சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆஸ்பத்திரியிலே சுதேசகுஷ்டரோகர்களைப் பராமரிப்பதற்காக மரியாயின் சபையைச்சேர்ந்த மிஷனரிய கன்னிகாஸ்திரீமாருள் ஒருகன்னிகாஸ்திரீயாய் வடசலமோன் தீவுகளுக்கு வந்திருக்கின்ருள். அலங்காரமான தனது பந்தையவிளையாட்டு உடுப்புகளைக் களைந்துவிட்டுக் கன்னிகாஉடைதரித்துச்சிஸ்றர் மேரி அம்புறேஸ் எனும் நாமத்துடன் அவள் வந்திருக்கின்ருள்.

### சுவீடனும் கத்தோலிக்கரும்

சுவீடன் என்பது லுத்தேர் சபையைச்சேர்ந்த ஓர்புறொட்டஸ்தாந்த நாடாகும். அங்கு கத்தோலிக்கர் அரசாங்கமந்திரிமாராய்வர அனுமதிக்கப்படுவதில்லை. அரசாங்க கலாசாலைகளிலே கத்தோலிக்க ஆசிரியர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை. அந்நாட்டின் கத்தோலிக்க மேற்றிராணியாரான நெல்சன்ஆண்டவர் லுத்தேர்சபையிலிருந்து மனந்திரும்பியவர். இவர் தென்மார்க்கிலே பிறந்தவர். அந்நாட்டிலே கடந்த 10 வருடங்களிலும் கத்தோலிக்கர்தொகை 6,000 பேரிலிருந்து 16,000 பேராக அதிகரித்திருக்கிறது. இவர்களை விசாரணைசெய்துவரும் 35 குருமாருள் அநேகர் இருஅறைகளைக்கொண்ட மனைகளிலேயே வசித்துவருகிருர்கள். ஒருஅறை கோவிலாகவும், மற்றஅறை குருமனையாகவும் உபயோகிக்கப்படுகின்றன.

### மெதடிஸ்தரும் செபமாலையும்

அமெரிக்க ஐக்கிய தேசத்திலே மெதடிஸ்த சபைக்குரிய றேடியோப் பிரசங்கத்தின் போது அச்சபையைச்சேர்ந்த புறொட்டஸ்தாந்த பிரமுகர் ஒருவர் சமீபத்திலே தாம்பேசியதைக் கேட்டிருந்தவர்களிடம் பின்வருமாறு கேட்டுக்கொண்டார். "உங்களுக்குச் சமீபமாகக் கூட்டுச்செபமாலைக் கூட்டம் ஒன்று இருக்கிறதா? அப்படி ஒன்றுஇருந்தால் அதில்சேர்ந்துகொள்ளுங்கள். இல்லையானல் நீங்கள் ஒன்றைஏன் தொடக்கப்படாது?" இவ்விதம் கேட்டுக்கொண்டவர் திரு. பில் டவுஸ் அவர்களே. இவர் அத்தேசத்திலே பலமாசங்களாகக் கூட்டுச்செபமாலைஇயக்கத்தை விருத்திசெய்துகொண்டு வருகின்ருர். இவர் இருபிள்ளைகளுக்குத் தந்தையாயிருந்து சின்சினத்திநகரிலே ஹைட்பாக்கத்துச் சமூக ஆலயத்தில் ஓர் ஞாயிறுவாரப் பாடசாலை நடத்திவருகின்ருர். "செபமானது உலகில் மகாவல்லபமுள்ள ஓர்பலமாயிருப்பதாக நான் எண்ணுகிறேன்; செபம் ருஷியாவை மனந்திருப்பமுடியுமென நான் நம்புகிறேன்; உள்ளபடியே எமது தேசம் எவ்வளவோ அதிகமாகச் செபத்தை வேண்டிநிற்கிறது" எனத் திரு. டவுஸ் கூறுகின்ருர். கூட்டுச்செபமாலை மட்டிலே இவரது தூண்டுதல்கள் எவ்வளவோ அனுகூலத்தைக் கொண்டுவந்திருக்கின்றன.

### அங்கிளிக்கன்கன்னியர்கள்

குவாடல்கனலைச் சேர்ந்த ஹொனியாருநகரிலே முன்னர் அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்த சபைக் கன்னிகாஸ்திரீமாராயிருந்தநால்வர் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையிலே சேர்ந்திருக்கின்றனர். மதர் மார்கறேற், சிஸ்றர் குவென், சிஸ்றர் வெரோணிக்கா, சிஸ்றர் மதலேயின் என்பவர்களே அந்தநால்வருமாவர். இந்தக்கன்னிகாசபையைச்சேர்ந்த ஏனையோருள் ஒரு ஆங்கிலேய நொவிசும், மற்றும் அநேக சுதேசநொவிஸ்களும் கத்தோலிக்க திருமறையில் சேர்வதற்காக வேதசத்தியங்களைப் படித்துவருகின்ருர்கள். மனந்திரும்புமுன் திருச்சிலுவைக் கன்னிகாஸ்திரீமாரென அழைக்கப்பட்டுவந்தஇவர்கள் தற்போது திருச்சிலுவையிலே மரியாயின் கன்னிகாஸ்திரீமாரென நாமம் வழங்கப்பெற்று ஓர்கத்தோலிக்க கன்னிகாசபையாகத் தற்போது அறியப்பட்டு வருகின்ருர்கள். சகலவசதிகளும் செய்யப்பட்டதும் இவர்கள் ஹொனியாருநகரிலேயே பாடசாலைகளிலும், மருந்துச்சாலையிலும், ஆஸ்பத்திரியிலும் தொண்டாற்றத் தொடங்குவார்கள்.

### பரீஸ்நகரும் கத். கல்வியும்

பரீஸ்நகரிலே கத்தோலிக்க உயர்தரக்கல்விக்கென்று ஒருகோடிபிறுங்சகாயபணம்உதவப் பரீஸ்நகரசங்கம் தீர்மானித்திருக்கிறது. அச்சங்கத்திலுள்ள 26 சோஷலிஸ்தரும், கம்யூனிஸ்தரும் இதுவிஷயமாக எதிர்பேசியபோதிலும் ஏனைய 52 அங்கத்தவர்களும் அதற்குச்சார்பாக நின்ருர்கள். இதில் அரைவாசித்தொகை அங்குள்ள கத்தோலிக்க சர்வகலாசாலைக்குக் கொடுக்கப்படும். இதுவரை பொதுப்பணத்திலிருந்து இந்தச் சர்வகலாசாலைக்குக் கொடுபடவிருப்பது இதுவே முதன்முறையாகும். பிரான்ஸ்தேச முழுவதிலும கத்தோலிக்கமக்கள் தங்கள் 'இலவச'கல்வியை ஆதரிப்பதற்காக வருடந்தோறும் நூறுகோடி பிறுங உதவிவருவதாக மதிப்பிடப்படுகிறது. இதனல் அரசாங்க பொதுப்பணத்துக்கு நூறுகோடி பிறுங் மிச்சமாகிறதென்பது இதன்கருத்தாகும். பரீஸ்நகரிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலை 3,000 மாணவர்களைக் கொண்டுள்ளது. 65 வருடங்களின்முன் ஸ்தாபிக்கப்பட்டது.

# திருப்பாடுகளின் காட்சி

## பேசாலை

———:———

இன்றையஉலகின் பலவித ஆபாசக்காட்சிகளுக்கு மாற்றுமருந்தாக இக்காலத்தில் நாம் காணவேண்டியதென்ன?

கிறீஸ்துநாதரின் திருப்பாடுகள் சம்பந்தமான காட்சிகளைக் காண்பதும், அவற்றைத் தியானிப்பதும், பாடுகளுக்குக்காரணமான பாவங்களை வெறுத்துத் தபஞ்செய்து சிலுவையின்பாதையில் நடப்பதுமே செய்யவேண்டியனவாகும்.

இவ்வித உயர்ந்தநோக்கை ஆதாரமாய்க்கொண்டு இவ்வருடம் இலங்கையிலே "பாஸ்" காட்சியால் பிரக்கியாதிபெற்றுவிளங்கும் பேசாலையிலே பிரமாண்டமான "பாஸ்"மண்டபத்தில் எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் வாழ்க்கையோடு தொடர்பான சம்பவங்களும், ஈற்றில் திருப்பாடுகளின் காட்சிகளும் தத்ரூபமானமுறையில் பெரியவாரத்தில் (பங்குனி 21, 22, 23-ந்திகதிகள்) பத்திக்குரியமுறையில் காட்டப்படவிருக்கின்றன.

காதாற்கேட்பதைவிடக் கண்ணுற்காண்பதுமேல். எனவே கத்தோலிக்கமக்கள் தக்கஇத்தருணத்தை ஆதாரமாய்க்கொண்டு இலவசமான இக்காட்சிகளை நேரிற்கண்டு தங்கள் ஆத்துமசம்பந்தமாய் ஞானநன்மை தேடிக்கொள்வார்களாக.

கட்டளைக்குரு.
பேசாலை

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

இரத்தவாதத்தினல் என்இரண்டுகால்களிலும் உண்டானபுண்கள் எவ்வித மருந்துகளினலும் குணமுருதிருந்து, திருஇருதயஆண்டவரின் இரக்கத்தினலும் பரிசுத்தபாத்திமா நாயகியின் அற்புத வேண்டுதலினலும் சுகமாயின. அன்னவரின்நாமங்கள் அர்ச்சிக்கப்படுவதாக.

ரூவான்வெலை B. சேவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வர்த்தமானம்

## பிரான்சும் கம்யூனிஸமும்

இரண்டாவது மகாயுத்தத்திலே பிரான்ஸ்தேசம் நாஸிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டதன்மேல் அங்கு கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்கள்தொகை 10 லட்சமாயிற்று. அடுத்த சிலவருடங்களிலும் சுமார் 9 லட்சமாகநிலைத்திருந்தது. ஆனால், 1947-48-ம்ஆண்டுகளில்நிகழ்ந்த தேர்தல்களின்மேல் அவர்கள்தொகை 3 லட்சமாகக் குறைந்து தற்போது ஒன்றரைலட்சம்பேரே இருந்துவருகின்றார்கள். இவ்வாறு அவர்கள்தொகைகுறைய மூன்று காரணங்கள் எடுத்துக்கூறப்படுகின்றன. முதலாவது, பணநிலை குறைந்துபோய் இருப்பது. இரண்டாவது, அவர்களதுபத்திரிகைகளின் செல்வாக்குக் குன்றியிருப்பதும், எத்தனையோபத்திரிகைகள் வெளிவாராமல் நின்றிருப்பதும். மூன்றாவது எதிர்ப்பிரசாரங்காரணமாக அவர்களின்பிரசாரவேலைகள் குறைந்திருப்பது. பிரான்ஸ் நாஸிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டபோது பரீஸ்நகரிலும், பிறபட்டணங்களிலும் வெளிவந்த சுமார் 500 பத்திரிகைகளில் அநேகம் தற்போது மறைந்துள்ளன. அன்றேல் மறையும் நிலைமையில் வந்திருக்கின்றன.

## பிரபலசங்கீத வித்வான்

அமெரிக்காவிலே அதிகம்உயர்ந்த சம்பளம் பெற்றுவருகின்ற சங்கீதகாரரும், ஓர்கத்தோலிக்கருமான திரு. பீங் குரொஸ்பிஅவர்கள் தாம் பாடகர் தொழிலில் ஈடுபட்ட இருபதாம்ஆண்டு விழாவைச் சமீபத்தில் கொண்டாடினர். ஓர் புக்கிப்பரின் புதல்வரான இவர் ஜாஸ்பான்ட் கோஷ்டியைக் கைவிட்டு ரேடியோமூலம் தமதுஇன்பமானகுரலில்பாடும் தொழிலை இருபதுவருடங்களின்முன் ஆரம்பித்தார். அதுமுதல் இவர் 42 பிலிம்கள் தயாரித்திருக்கின்றார். ஒவ்வொன்றிலும் 72,000 பவுணுக்குமேல் சம்பாதித்திருக்கின்றார். இதுதவிர ரேடியோமூலமும், றெக்கோடிங்மூலமும் அதிகமானபணஞ்சம்பாதித்திருக்கின்றார். தற்போது இவரின் வருடவருமானம் 3,50,000 பவுண்வரையிலாகும்.

## பிள்ளைகளும் சினிமாவிலக்கும்

சன்மார்க்கத்துக்குக் கெடுதியான கதாபிலிம்களைக்காட்டும் சினிமாப் படக்காட்சிகளைப் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பார்ப்பதைவிலக்கும் புதிய சட்டம்ஒன்று இத்தாலியபாராளுமன்றத்திலே அங்கீகாரத்துக்காகச் சமீபத்திலே கொண்டுவரப்படவிருக்கிறது. 290 மாணவர்களைக்கொண்ட ஆரம்பபாடசாலைஒன்றிலே இத்தாலிய பாராளுமன்றக்கம்மிஷன்ஒன்று நடத்தியவிசாரணையின்பயனாய், அப்பிள்ளைகளில் 271 பேர் ஒருமாசத்திலே 6 முதல் 18 முறைகளிலே சினிமாப் படக்காட்சி பார்த்திருக்கின்றனர். அவர்களில்அநேகர் இடையறாது தினமுமே பார்த்துவந்திருக்கின்றனர். அக்காட்சிகளிலே அவர்கள் 914 சண்டைகளையும், 360 குடிவெறிகளையும், 168 திருட்டுகளையும், 120 வியபிசாரங்களையும், 224 கொலைகளையும், 645 கொள்ளைகளையும், 65 தற்கொலைகளையும் பார்த்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தைத் தயாரிப்பதிலே பெற்றாரும், ஆசிரியர்களும், சினிமாநிபுணர்களும் கம்மிஷனுக்கு உதவிசெய்திருக்கிறார்கள்.

## அந்நியர்களாகச்சென்றவர்

சீனக்கம்யூனிஸ்தர்களின் கொடுமைகளுக்காற்றாது அகதிகளாக வெளியேறிய போர்த்துக்கேயர்கள் சிறுசிறு கூட்டங்களாகப் போர்த்துக்காலுக்குச் சமீபகாலமுதல் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அதிகமானோர்தங்கள்சொந்தநாட்டை ஒருபோதுமே கண்டிராதவர்கள். இவர்களில்சிலரே போர்த்துக்கேய பாஷையைப் பேசக்கூடியவர்கள். சீனவின்கரைக்கு அப்பாலுள்ள மக்காஓ எனும் சிறியவர்த்தகதலத்தில் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குமுன் போர்த்துக்கேயர்கள் குடியேறியதுமுதல் தூரகிழக்கிலே பெருந்தொகையான போர்த்துக்கேயர்கள் இருந்துவருகிறார்கள். இவர்கள் சீனர்களாலே எப்போதும்நேசிக்கப்பட்டு அவர்களுடன் சம்பந்தமும் செய்திருக்கிறார்கள். உத்தமகத்தோலிக்கராய்த் தற்போது ஷாங்காயிலிருந்துவருகிற போர்த்துக்கேயர்கள் பெருங் கஷ்டமுற்றவர்களாய்அங்கிருந்து வலசைவாங்குகிறார்கள். இவர்கள்எல்லாம் தேவதாயாரில் மிகுந்த பத்தியுடையவர்கள்.

## செய்திபரப்பும் புதியமுறை

பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் ஆகாயவிமானங்கள் பறந்துகொண்டிருக்கும்போது, அவற்றின்விமானிகள் யாதாமோர் கஷ்டமுமின்றியே ஓர் பொத்தானை அழுத்திக் கீழே விமான நிலையங்களுடன் நேர்முகமாகப் பேசக்கூடியமுறைஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவசியம் நேருமிடத்து அவர்களின் பேச்சுகளைச் சுமார் ஆயிரக்கணக்கானமைல்தூரத்துக்கப்பாலும் அனுப்பிவைக்கக்கூடும். பிரித்தானிய, உலாந்த, பிரான்சிய—ஆகாயப்பிரயாணவிமானங்களிலே விசேஷமாக வடஅத்திலாந்திக்சமுத்திரத்துக்குமேலாகப் பிரயாணஞ்செய்யும் விமானங்களிலே இப்புதியமுறை பரிசீலனைசெய்யப்பட்டுவருகிறது. சில அமெரிக்க,கனடியவிமானங்கள் ஏலவே இந்தமுறையைக் கையாளத்தொடங்கிவிட்டன. இதனால் ரேடியோவும், அதனை இயக்குவோரும் இனிஅவ்விமானங்களில் வேண்டியதில்லை. அப்போது அவர்களின்சம்பளம் நின்றுவிடுவதுடன் அவர்களின் நிறையும் ஆளுக்கு 200 றாத்தல்வீதம் குறைந்துவிடுகிறது.

## இருவருடத்தில் தயாராகும்

அமெரிக்கஐக்கியதேசத்திலே யுத்தத்துக்குச் சேனைகளைத் திரட்டித் தயாராக்கும்தலைவரான சாள்ஸ் வில்சன்அவர்கள் சென்றசனியன்று வாஷிங்ரன்நகரில் பேசியபோது: இன்னும்இருவருடத்துள் அமெரிக்க ஐக்கியதேசம் முற்றாக யுத்தத்துக்கோ, அன்றேல் முற்றாகச் சமாதானத்துக்கோ ஆயத்தமாகிவிடுமெனக் கூறியிருக்கின்றார். ஈற்றிலே ஜெற்எஞ்ஜின்கள் மாதம்ஒன்றுக்கு 18,000வீதமும், தாங்கிகள் மாதம்ஒன்றுக்கு 35,000 வீதமும் உற்பத்திசெய்யப்படும்; இருவருடங்களிலும் பாதுகாப்புக்கென்று பதினையாயிரகோடிடலர் உதவுமாறு அமெரிக்க ஐக்கியதேசம்கேட்கப்படும்; மூன்றுவருடங்கட்கு மேற்பட்டகாலத்தில் இத்தொகை பத்தாயிரகோடிபவுணால் அதிகரித்துவிடுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## ஜெற் வெடிகுண்டுவிமானம்

வெடிகுண்டுவீசும் உலகின்முதலாவது ஜெற்விமானமாகும் பிரித்தானிய "கன்பெறா" விமானம் சென்ற 21-ந்திகதி புதன்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்டு அத்திலாந்திக்சமுத்திரத்துக்குமேலாக 2,100மைல் தூரத்தையும் இதற்குமுன் எந்த விமானமும் பறந்திராத அத்துணை தீவிரகெதியிலே 4 மணித்தியாலம் 40 நிமிஷத்தில் பறந்து கனடாவிலே நியூபவுண்ட்லாந்தைச்சேர்ந்த கான்டர்எனுமிடத்தைப் போய்ச் சேரலாயிற்று. அத்தனை மைல்தூரத்தையும் மணித்தியாலம் ஒன்றுக்கு 450 மைல்வேகத்தில் அது பறந்துசென்றிருக்கிறது. இதற்குமுன் சென்றதைமாதம் 31-ந்திகதி அத்திலாந்திக்சமுத்திரத்தைஅதிகம்குறைந்தநேரமாக 7 மணித்தியாலம் 48 நிமிஷத்தில் ஓர்விமானம் கடந்திருக்கிறது இது லண்டனிலிருந்து நியூயோக்நகருக்குப்பறந்துசென்ற ஓர் "மஸ்ராங்" விமானமா[illegible]

THE CONDITIONS AND PRAYERS TO GAIN THE HOLY YEAR INDULGENCE PRINTED IN TAMIL

in an handy prayer book picture size

*are available at,*

St. Joseph's Catholic Press, Jaffna.

தபசுகாலத்தின்

## 4-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 6 : 1—15)

அக்காலத்தில் யேசுநாதர் திபேரியாநகரத்துக் கடலாகிய கலிலேயாநாட்டுக்கடலைக்கடந்து போனர். திரளானசனக்கும்பல், அவர்வியாதிக்காரருக்குச் செய்துவரும் அற்புதங்களைக் கண்டிருந்தமையால் அவரைப் பின்சென்றது. ஆகையால், யேசுநாதர் ஓர் மலைமீது ஏறி, அங்கேதம்முடையசீஷர்களோடு உட்கார்ந்திருந்தார். அப்படியிருக்க யூதர்களுடையதிருநாளாகிய பாஸ்காப்பண்டிகை சமீபித்திருந்தது. அப்போது யேசுநாதர் தம்முடையகண்களை ஏறெடுத்து, மிகுதியான சனக்கும்பல் தம்மிடத்தில் வந்திருக்கிறதைக்கண்டு, பிலிப்பென்பவரைநோக்கி: இவர்கள் உண்ணும்படி எங்கேயிருந்து அப்பங்களைச்சம்பாதிப்போம்? என்ருர். ஆனால், அவரைச்சோதிக்க இப்படிச்சொன்னர். ஏனெனில், தாம்செய்யஇருப்பதைத் தாமே அறிந்திருந்தார். பிலிப்பு அவருக்குமறுமொழியாக: இவர்களில்ஒவ்வொருவனும் கொஞ்சமாவது சாப்பிடுவதற்கு இருநூறுதெனியர்பெறும் அப்பங்கள் இவர்களுக்குப் போதாதே என்ருர். அப்பொழுது அவருடைய சீஷர்களில் ஒருவரும், சீமோனென்னும் இராயப்பருடைய சகோதரருமாகிய பெலவேந்திரர்அவரைநோக்கி: வாற்கோதுமைஅப்பங்கள் ஐந்தும், மீன்கள் இரண்டும் வைத்திருக்கிற ஓர்பையன் இங்கேஇருக்கிறன். ஆனால், இத்தனைபேர்களுக்கு அவைகள் எம்மாத்திரம்? என்ருர். யேசுநாதர்: மனிதரைப் பந்தியமரச்செய்யுங்கள்என்ருர். அவ்விடத்தில் அதிகம்புல்இருந்தது. அங்ஙனம் ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் பந்தியமர்ந்தார்கள். அப்பொழுது, யேசுநாதர் அப்பங்களைஎடுத்து, நன்றியறிந்த தோத்திரம் செலுத்தினபின்பு பந்தியில் அமர்ந்தவர்களுக்கு அவைகளைப்பரிமாறினர். அப்படியே மீன்களிலும் தங்களுக்கு இஷ்டமானமட்டும் அவர்களுக்குப்பரிமாறினர். அவர்கள் திருப்தியடைந்தபின் அவர்தம்முடைய சீஷர்களைநோக்கி: மீதியானதுண்டுகள் சேதமாகாதபடிக்கு அவைகளைச்சேர்த்துவையுங்கள் என்ருர். ஆதலால் வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில்புசித்து மீதியான துண்டுகளைச் சேகரித்துப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள். யேசுநாதர்செய்தருளின அற்புதத்தை அம்மனிதர் கண்டபோது: மெய்யாகவே உலகத்தில் வரவிருக்கிற தீர்க்கதரிசி இவர்தான்என்ருர்கள். ஆகையால், அவர்கள் தம்மை இராசாவாக்கும்படி பலவந்தமாய்ப் பிடிக்கவரப்போகிருர்களென்று யேசுநாதர் அறிந்து, மறுபடியும் தனியே மலையின்மேல் ஏறி விலகிப்போனர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## ஆசிரியைகளினதும் பழைய மாணவிகளினதும் வருடாந்த ஞானவொடுக்கம்

ஆசிரியைகளினதும், பழைய மாணவிகளினதும் வருடாந்த ஞானவொடுக்கமானது இளவாலைத் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் நிகழும் பங்குனிமாசம் (28-3-1951) புதன்கிழமை பி. ப. 4 மணியளவில் ஆரம்பமாகி அடுத்துவரும் சித்திரை மாசம் 1-ந்திகதி காலை திவ்வியபூசையுடன் முடிவாகும்.

ஞானவொடுக்கத்தில் பங்குபற்றவிரும்புவோர் தாபனத்தலைவியவர்கட்கு ஏற்கனவே அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

"அர்ச். மரியகொறற்றி" என்னும் புதியஅர்ச்சியசிஷ்டவளின் நாடகமானது, திருக்குடும்பக் கன்னியர்மடமண்டபத்தில் சித்திரைமாசம் 1-ந்திகதி பி. ப. 6 மணியளவில் தமிழில் அழகாக நடித்துக்காட்டப்படும். ஞானவொடுக்கத்தில் பங்குபற்றியோர் இதையுங்கண்டு களிகூர்ந்தேகுமாறு அன்புடன் வரவேற்கிறோம்.

MOTHER SUPERIOR
Holy Family Convent
Ilavalai

## கந்தளாய்க் குளத்திருத்தம்

திரிகோணமலைப் பிரிவிலுள்ள கந்தளாய்க்குளத்தை விசாலமுடையதாய்த் திருத்தியமைக்கும்வேலை இவ்வருடத்திலே தொடக்கப்படவிருக்கிறது. அவ்வாறு திருத்தப்படுமிடத்து அக்குளத்திலிருந்து தற்போது 5,000 ஏக்கருக்குப் பதில் 24,000 ஏக்கரை நீர்ப்பாய்ச்சக்கூடியதாயிருக்கும். தற்போது 37,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அக்குளம் விசாலமாக்குமிடத்து 1,40,000 ஏக்கர் விஸ்தீரணமுடையதாகும். இவ்வேலைத்திட்டத்தின் முதல் இருபகுதிகளுக்குமாக நிகழும் அரசிறைவருடத்திலே 6,86,000 ரூபா செலவிடப்படவிருக்கிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

இற்றைக்கு 20 வருடங்கட்குமேலாக என்னைப்பீடித்துத் தின்புறுத்திக்கொண்டிருந்த "கேணியா" என்னும் கொடிய வருத்தத்திலிருந்து பரிசுத்த பாத்திமா மாதாவின் பேருளால், தற்போது பூரணசுகமடைந்துள்ளேன். ஆகையால் அவவின் புகழும், அருளும்பெருகி அப்பரிசுத்ததாயின் பக்தியும் மேன்மேலும் பரவுவதற்காக இதைப்பிரசுரிக்கிறேன்.

மரியான் பறுனந்து
கபிரியேல்பிள்ளை

மணற்சேனை,
கொச்சிக்கடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 2 | அர்ச். 80 வேதசாட்சிகள் | (ஊ) |
| சனி | 3 | அர்ச். குணகுந்தம்மாள் | (ஊ) |
| ஞா | 4 | தபசுகாலத்தின் 4-ம் ஞாயிறு— அர்ச். கசிமீர், | (ஊ) |
| திங் | 5 | அர்ச். எயுசேபியார் | (ஊ) |
| செவ் | 6 | அர்ச். பெர்பேர்த்தம்மாள் | (சி) |
| புத | 7 | அர்ச். அக்குயி. தோமாஸ் | (வெ) |
| வியா | 8 | அர்ச். தேவ. அருளப்பர் | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
பங்குனி மாதம் 1-ந் திகதி

## சூசையப்பரிடம் போங்கள்

சத்தியதிருச்சபை தன் பரலோக பாதுகாவலரான அர்ச். சூசையப்பரைத் தனதுஞான மக்கள் விசேஷவிதமாக வணங்கித்துதித்துப் பக்திசெய்து, அவரது தவறாதஅடைக்கலத்தையும் சலிகையையும் அடைந்துகொள்ளத்தக்கதாகத் தெரிந்து நியமித்துள்ளபங்குனிமாதம் இன்று பிறந்திருக்கிறது. அர்ச். சூசையப்பரின் மகிமைப்பிரதாபத்தையும், அதிகாரமகத்துவத்தையும் சரிவரக்கண்டறியும் எவர்தான் அவரைச்சங்கித்து வணங்காமலும், நேசித்துப் பத்திசெய்யாமலும், அவரது அடைக்கலத்தைத்தேடாமலும், சலிகையைநாடாமலும் இருப்பர்? மனுக்குலத்தை இரட்சிக்க மனுஷாவதாரஞ்செய்த தேவகுமாரனை யேசுக்கிறீஸ்துநாதர் இப்பூவுலகில் எப்பூங்கொடிநிழலில் தங்கத்திருவுளமானார்? தம்மைப் போஷித்து வளர்க்கும் திருக்கைத்தாதையாக எவரைத் தெரிந்துகொண்டார்? முப்பொழுதுங்கன்னிகையாய் மூவுலகநாதனைப் பெற்றெடுத்த தேவ அன்னையின் விரத்தபத்தாவாக எவர்தெரிந்துகொள்ளப்பெற்றார்? அர்ச். சூசையப்பர்அன்றோ! அவர் தம்மெய்வருந்தத் தினமும் வேலைசெய்துதமதுதிருப்பத்தினியாரையும், திருக்குமாரனையும் குறைபாதஅன்போடும், குன்றாதகரிசனையோடும் பாதுகாத்துப் பரிபாலித்துவந்தாராகலின் அவர்கள்எஞ்ஞான்றும் அவர்மாட்டுக் குன்றாத அன்புக்கும், குறையாத நன்றிக்கும் பாத்திரமானவர்கள்அன்றோ! மூவுலகேந்தியவரை அவர் இப்பூவுலகில் ஏந்தியிருக்கும்போது, பரலோக பூலோக அரசியேஅவரதுதிருப்பத்தினியாய் இருக்கும்போது, திருக்குடும்பத்துக்கே அவர்தலைவராக இருக்கும்போது அவரது மகிமைப்பிரதாபத்தை எடுத்துக் காண்பிக்க இன்னுமே அத்தாட்சிகள்வேண்டுமேயோ? ஆகவே, நாமும் இம்மாதவத்தரின் அடைக்கலத்தை நாடுவோம். அவருடைய பாதுகாவலைத் தேடுவோம். நம்மால் இயன்றமட்டும் வாழ்த்திவணங்கிப் போற்றிப்புகழ்ந்து அவரைப்பக்திபண்ணுவோம். நமது ஆபத்து அவசியங்களிலெல்லாம் அவரதுஒத்தாசையை இரந்துகொள்வோம். ஏனெனில், அவர் தமதுபக்தர்களை ஒருபோதுமே கைவிடமாட்டார். தம்மைநம்பி வந்தவர்களை அவர்தள்ளிவிடமாட்டார். தமது சலிகையைத் தேடிவந்தவர்களுக்குத் தயை காண்பியாது விடமாட்டார். ஓர் நாள் நம் திவ்விய இரட்சகர் அர்ச். மார்க்கரீத்அம்மாளுக்குக் காட்சியாகி, "மகளே! நமது திருத்தாயாரையும், நம்மை வளர்த்த தகப்பனாராகிய சூசையப்பரையும் சங்கித்துத் தினந்தோறும். அவர்களை வேண்டிக்கொள்ள மறவாதே" என்று வசனித்தருளினார். அதனால் நாம் தேவதாயாரையும், அர்ச். சூசையப்பரையும் சங்கித்துத் தினமும்அவர்களை மன்றாடிவருவது ஆண்டவருக்கே பெரிதும் உவப்பாகும். இன்னும் தேவதாயார்பரலோகபூலோக அரசியாய்இருப்பதால், அவர் திருப்பத்தாவாகிய அர்ச்.சூசையப்பர் பரலோகபூலோக அரசருக்கேற்றமகிமையடைந்திருக்கிறார். அதனால் தேவமாதாவுக்குப் பிறகு ஏனையஅர்ச்சியசிஷ்டர்களைக்காட்டிலும் அவர் பரலோகத்திலும்பூலோகத்திலும் அதிகமாகப்பூசித்து வணங்கப்படுகின்றார். ஆதலால் "சூசைமாமுனியைத்—தோத்திரித்தற்கேற்ற—மாசமாம்பங்குனி இதோ!—வந்ததின்பமாக" எனும் இன்பகீதத்தை அன்புபெருகப் பாடிக்கொண்டு அர்ச்.சூசையப்பரிடம் போவோம். அத்திருமாதவனின் வணக்கமாதத்தைப் பக்திச்சிறப்புடன் கொண்டாடுவோம். அவரது தவறாதஅடைக்கலத்தையும், குறையாதஅனுக்கிரகத்தையும் அடைந்துகொள்வோம். "நான் அர்ச். சூசையப்பரிடம் கேட்டதெல்லாம அவர் எனக்குக் கொடுத்தருளினார்" என்று அர்ச். பெரிய தெரேசம்மாள் கூறிய அமுதவாக்கு எந்தமாதத்திலும்,விசேஷமாக அவரதுபத்திக்கென நேர்ந்துகொள்ளப்பெற்ற இந்தப்பங்குனிமாதத்திலும் எமது விருதுவாக்கியமாக இருப்பதாக!

## அச்சுப்பிரசுர ஞாயிறு

மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் அவர்கள் தமது மேற்றிராசனமுழுவதிலும் நிகழும்பங்குனிமாதம 11-ந் திகதி அச்சுப்பிரசுர ஞாயிறாக அனுசரிக்கப்பட வேண்டுமென ஆஞ்ஞாபித்திருக்கின்றார். தேவநற்கருணைஎழுந்தேற்றஞ்செய்து அதன்முன்பாகச் சொல்லப்படவேண்டியசெபம் "பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள்" எனும் செபப்புத்தகத்தின் 237-ம்பக்கத்தில் இருக்கின்றது. கத்தோலிக்க இலக்கியபிரசுரங்களைப் பரப்புவதிலே, விசேஷமாய்ச் "சத்தியவேத பாதுகாவல"னுக்கும், "கதலிக் மெசெஞ்ச"ருக்கும் புதியசந்தாதாரர்களைச் சேர்ப்பதாலே துணைச்செய்யுமாறு குருப்பிரசாதிகளும், கத்தோலிக்கசேவாகுழுவினரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். அவர்கள் கத்தோலிக்க இலக்கியபிரசுரங்களில் (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) தங்களுக்குத் தேவையானவற்றிற்குக் "கொழும்பு, புறக்கோட்டை, அர்ச். பிலிப்புநேரியார்கோவில் கத்தோலிக்க புத்தகசாலை" அல்லது "யாழ்ப்பாணம், கத்தோலிக்க அச்சியந்திரசாலை" ஆகிய இரண்டில் ஒன்றுக்கு நேரேஎழுதிக்கொள்ளலாம். யாழுப்பாணத்திலே மேற்றிராசன இலக்கியகழகத்தின் காரியதரிசிஅவர்கள் அச்சுப்பிரசுர ஞாயிறுவார முயற்சிகளை முன்னின்று வழிநடத்துவார்.

**B. Wm. Jesuthasan, O.M.I.**
மேற்றிராசன ஐக்கியசங்க
விசாரணைக் குரவர்

**For Stamp Collectors**

New Selections
75 Foreign Stamps
all Different

*Apply:*

*Manager,*
**St, Joseph's Catholic Press,**
**Jaffna.**

## வத்திக்கான் செய்திகள்

இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் முதன்முதலாகச் சர்வதேச சற்பிரசாத மகாசமாகமம் நடைபெறவேண்டிய இடமாகப் பரிசுத்தபாப்பரசர் ஸ்பானியதேச பார்சலோனா நகரை அனுமதித்திருக்கிறாரென வத்திக்கானிலிருந்து சென்ற வியாழக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இச்சமாகமம வருகிற 1952-ம் ஆண்டின் வசந்தகாலத்தில் நடந்தேறவிருக்கிறது.

வத்திக்கானின் திருச்சடங்காசார முறைகளின் திருச்சங்கமானது தேவமாதாவுக்கு மங்களவார்த்தைகூறிய தேவதூதரான அர்ச். கபிரியேல் சம்மனசானவரைத் தெலிபோன், தந்திவேலை செய்பவர்களின் பரிபாலகரும், பாதுகாவலருமாகச் சென்ற 20-ந் திகதி செவ்வாயன்று பிரகடனஞ்செய்திருக்கிறது. பரிசுத்தபாப்பரசர் இது சம்பந்தமான பிரமாணத்தைச் சென்ற தைமாசம் 12-ந் திகதி அங்கீகரித்திருந்தார். தேவசுதனை யேசுக்கிறீஸ்துநாதரின் திருமனுஷாவதார சுபசெய்தியைப் பரிசுத்த கன்னிமரியம்மாளுக்குத் தேவதூதரான கபிரியேல் சம்மனசானவரே கொண்டுவந்தகாரணமாகஅவர்களின் பரிபாலகராகவும், பாதுகாவலராகவும் அவர் தெரியப்பெற்றிருக்கின்றார்.

### வைசூரிநோய் கண்டவர்

புங்குடுதீவிலே ஒருவருக்கு அம்மைநோய் கண்டிருப்பதாகச் சென்றவாரம் செய்திகிடைத்தமையால் யாழ்ப்பாண வைத்திய சுகாதார அதிகாரியான டக்றர் பி. இராசசிங்கம்அவர்கள் அங்கு சென்று நோயாளியைத் தனிமையாக ஒதுக்கிவைத்து, வேண்டியநடவடிக்கை எடுத்து, அங்குள்ளாருக்கெல்லாம் அம்மைப்பால் குற்றும்படிகட்டளையிட்டனர். நோயாளி சென்ற வெள்ளிக்கிழமை இறந்துவிட்டாரெனத் தெரியவருகிறது.

## பாடசாலைக்கோணம்

### ஆசிரியகலாசாலைப் பிரவேசப் பரீட்சை (தமிழ்) 1951

இவ்வாண்டு ஆனிமாதம் மேற்படி பரீட்சை வித்தியாபகுதியாரால் நடத்தப்படும். இதுகாலவரை பரீட்சார்த்திகள் பாஷை, எண்கணிதம், விவேகம் எனும் 3 பாடங்களில் சோதிக்கப்பட்டார்கள். இவ்வருடம் பாஷை, எண்கணிதம், பொதுஅறிவு எனும் மூன்று பாடங்களிற் பரீட்சிக்கப்படுவார்கள். பொதுஅறிவுப் பரீட்சையில் இலங்கைச் சரித்திரம், இலங்கைப் பூமிசாஸ்திரம், இலங்கைக் குடியியல் இடம் பெறும். பாஷைக்கு விசேஷ கவனஞ் செலுத்தவேண்டும். வியாசம் (கட்டுரை) பிரதானமாகக் கவனிக்கப்படும். பாஷையில் திருப்திகரமான புள்ளி பெறாதவர்கள் முழுச்சோதனையிலும் அரங்கேறாதவர்களாகக் கொள்ளப்படுவர்.

### Conference for English Assistants

The N. P. T. A. is organising a one day Conference of English Teachers in the Primary and Form I or Lower 6 classes on Saturday, **March 3rd 1951** at Jaffna Central College commencing at 9 a. m. All are advised to attend.

**G. M. R. C. S.**

## சுதேச வர்த்தமானம்

### குருப்பட்டாபிஷேகம்

நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் நிகழும் பங்குனிமாதம் 16-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்குக் குருமார்கூட்டத்துடன் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளி அங்கே வண. பெனடிற் சூசைப்பிள்ளை பிறதருக்குக் குருப்பட்டம் அருளுவார். மறுநாளாகிய 17-ந்திகதி சனிவாரம் புதிய குரவர் தமது ஜனனபதியாகிய காம்பனுக்குச்சென்று அன்று காலை 7-30 மணிக்கு அர்ச். செபஸ்தியார் கோவிலிலே தமது முதற் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றுவார்.

### லங்காநாயகி மகாலயம்

கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த தேவத்தையிலே லங்காநாயகி பேரால் கட்டியெழுப்பப்படவிருக்கும் பஸிலிக்காஎனும் மகாலயத்துக்குச் சென்ற தைமாச இறுதிவரையிலே 3,03,241 ரூபா 75 சதம் சேர்ந்திருப்பதாக அப்பதியின் பரிபாலனரான சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### பாத்திமாமாதாவின் புதியசுரூபம்

இலங்கையிலே சென்றவருடம் சுற்றுப்பிரயாணஞ் செய்துபோனதும், இன்னுமே உலகசுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருப்பதுமானபாத்திமாமாதாவின் திருச்சுரூபத்தைப் போன்று அதேசாயலுள்ள சுரூபம் ஒன்று சென்றசனிக்கிழமை கொழும்புக்குக் கொண்டுவரப்பெற்றுப் பொறளையிலுள்ள அதிமேற்றிராணியாரின் மாளிகையிலே தற்போது இருந்துவருகிறது. யாத்திரைக்கன்னிகையின் திருச்சுரூபம் இங்கே சுற்றுப்பிரயாணஞ் செய்தகாலத்தில் அதற்குப் பொறுப்பாளியாயிருந்த வண. டெமோத்தியோ சுவாமியாரால் பாத்திமாவிலுள்ள உலகயாத்திரைக்கம்மிஷனின் உதவியைக்கொண்டு கலமுல்லை விசாரணைப் பங்குக் குரவரான வண. யோசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRESS SUNDAY

His Lordship the Bishop of Jaffna has ordered that the 11th of March should be observed as Press Sunday throughout his diocese. The prayer to be said before the Blessed Sacrament exposed is on page 237 of the பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள். The missionaries and the Catholic Action groups are requested to help in the diffusion of Catholic Literature especially by getting new subscriptions to the *Catholic Guardian* and the *Catholic Messenger*. They may write direct **either** to the "Catholic Book Depot, St. Philip Neri's Church, Pettah, Colombo" **or** to the "Catholic Press, Jaffna" for their requirements in Catholic Literature (English, Tamil and Sinhalese). The Secretary of the Diocesan Literature Committee will direct the Press Sunday activities in Jaffna.

**B. Wm. Jesuthasan, O. M. I.,**
Director, Diocesan Union.

பெர்னண்டோ சுவாமியாருக்கு இச் சுரூபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கலமுல்லைக் கோவிலிலே தேவதாயாரின் சேத்திரத்தில் செய்யப்பட்டுவரும் திருத்தங்கள் முற்றுப்பெற்றதும், இது அங்கு சுற்றுப்பிரகாரமாகக் கொண்டு சென்று அங்கே ஸ்தாபிக்கப்படும். இச் சுரூபம் பாத்திமாவின் அற்புத திருசேத்திரத்தில் வைக்கப்பட்டிருந்து, லெய்றாநகர் மேற்றிராணியாராலே விசேஷித்தவிதமாக ஆசீர்வதிக்கப்பெற்றுக் கலமுல்லைச் சேத்திரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

### புதியஸ்பீக்கரின் நன்மதி

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் புதியஸ்பீக்காரகத் தெரியப்பெற்றுள்ளவரான திரு. அல்பேட் பீரிஸ் அவர்கள் கொழும்பு அர்ச். சூசையப்பர் கல்லூரிக்குச் சென்ற 19-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் விஜயஞ்செய்தபோது, அதன் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் மனோற்சாகமான வரவேற்பு அவருக்கு அருளப்படலாயிற்று. அக்கல்லூரிப் பழையமாணவர்களில் ஒருவராகிய புதியஸ்பீக்கர் அவர்கள் அவ்வேளை பேசியபோது, அக்கல்லூரியிலே தாம் கல்விபயின்ற காலத்தைஞாபகத்துக்குக்கொணர்ந்து, அப்போது தாம் கல்லூரிக்கிறிக்கெற் கோஷ்டிக் கப்ரினாகஇருந்ததாக எடுத்துக்கூறினர். தங்களுக்கு நேரிடும் கஷ்டங்களிலெல்லாம் செபத்தைத் துணைக்கொள்ள வேண்டுமென்று மாணவர்களுக்கு நன்மதிகூறித் தமது கஷ்டங்களிலெல்லாம் தேவனின்வழிகாட்டுதலையே தாம்எப்போதும் தேடிவந்ததாகத் தெரிவித்துக் கொண்டார்.

### மாணவரும் க்ஷயரோகமும்

டக்றர் வால்ற்றர் எஸ். ஜே. பீரிஸ் அவர்களைத் தலைவராகக்கொண்டு மொறட்டுவாவில்இருந்துவருகின்றக்ஷயரோகத் தடைச்சங்கமானது க்ஷயரோகவிஷயமாய் மாணவருக்குள்ள அறிவை அளவிட்டு நிச்சயிக்குமாறு இலங்கை முழுவதிலும் ஓர் பரீட்சை நடத்த ஆயத்தப்படுகின்றது. இப்பரீட்சை எல்லாமத்தியதானங்களிலும் வருகிற ஆடிமாத எஸ். எஸ். சி. பரீட்சையின் கடைசித்தினமன்று சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நடத்தப்படும். இதற்கான மனுப்பத்திரங்கள் பங்குனி 31-ந்திகதிக்குமுன் அந்தந்தப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் மூலம் சங்கத்தினிடம்போய்ச் சேரவேண்டும். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரிடமும் பிரவேசச்சலாராக ஒரு ரூபா அறவிடப்படும். ஆனால், க்ஷயரோக சம்பந்தமான பிரசுரங்கள் இலவசமாக வழங்கப்படும். பரீட்சையில் உயர்ந்தபுள்ளிகள் பெறுவாருக்குச் சேமநிதிப்பத்திரங்கள் வெகுமதியாக வழங்கப்படும். பரீட்சையில் சித்தியடைவாருக்கெல்லாம் தாரதரப்பத்திரம் வழங்கப்படும்.

### நாலாயிரம் ரூபா அபராதம்

கண்டியிலே கே. எம். பி. மீரு சாய்போ வர்த்தக சமுதாயத்தைச் சேர்ந்த கே. எம். செய்யது இஸ்மாயில் என்பவர் 135 றாத்தல் கொண்ட ஓர் மூடை கோதுமை மாவுக்கு மொத்த விற்பனைக்கட்டுப்பாட்டுவிலை 29 ரூபா 89சதமாயிருக்க, அதனை 32 ரூபாவாக விற்று அகப்பட்டுக் கண்டிக்கோட்டிலே சென்ற வியாழக்கிழமை நாலாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டனர். கலகாவைச்சேர்ந்த அம்பல் பேக்கறியைச்சேர்ந்த செல்லமுத்து என்பவர் ஒருறாத்தல் பாணுக்குக் கட்டுப்பாட்டுவிலை 28 சதமாயிருக்க, அதனை 29 சதமாகவிற்றுக் கண்டிக்கோட்டிலேயே அன்றுதினம் ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டனர்.

### முத். பட்டமும் புதியகருதினல்மாரும்

பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபட்டஞ் சூட்டும் திருவைபவம் அடுத்த வைகாசிமாதம் நடந்தேறுமென்றும், அதேவேளையில்தானே பரிசுத்தபாப்பரசர் கருதினல்மார் திருச்சங்கத்திலே காலியாயிருக்கும் 19 ஸ்தானங்களில் சிலவற்றிற்கு அல்லது எல்லாவற்றிற்குமே புதியகருதினல்மாரை நியமனஞ்செய்வதற்காகக் கருதினல்மார்திருச்சங்கத்தைக் கூட்டுவாரென்றும் தற்போது தெரியவருகிறது. இன்னும் முத்திப்பேறுபட்டஞ்சூட்டும் அதிகாரப்பத்திரம் படிக்கப்படும்போது பாப்பரசர் பிரசன்னமாயிருந்து விசேஷஆடம்பர பத்திச்சிறப்புடன் முத்திப்பேறுபட்டஞ் சூட்டும் திருச்சடங்கை நடத்துவாரென்றும், அவர்தாமே அதிகாரப்பத்திரத்தைப் படிக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. வழமையிலே அதிகாரப்பத்திரம் அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே காலையில் படிக்கப்படுகிறது. பின்னர் பாப்பரசர் புதிதாக முத்திப்பேறுபட்டஞ் சூடியவரின் திருப்பண்டத்துக்கு வணக்கஞ்செலுத்தச் சாயந்தரமே அம்மகாலயஞ் செல்வார். இத்திருப்பட்டவைபவத்தின்போது பெரியயாத்திரைகள் ரோமாபுரிக்கு நடைபெறவிருக்கின்றன. சிலயாத்திரைகள் அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்து அங்குநடந்தேறும். அவற்றில்ஒன்றை நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் தலைமைவகித்து நடத்தவிருக்கின்றார்.

நல்லூர் மீசாம்

## வரப்பிரசாத நவநாள்

எமக்குச் சத்தியவேதவிசுவாசமாகிய அரும்பெருங்கொடையைத் தந்த அர்ச். பிரான்சீஸ்சவேரியார்மட்டிலே நாமெப்போதும் நன்றியுள்ளவர்களாய் இருத்தல் எமது குன்றாத கடமையல்லவா? எமதுஅர்ச்சியசிஷ்டவர் இந்தியாவில் வேதம்போதித்துவந்த காலத்திலே பிரான்சீஸ்என்னும் நாமத்தைக்கொண்ட இன்னொருகுருவானவரை இலங்கைக்கு அனுப்பி வேதம்போதிப்பித்தார் என்று ஒரு பாரம்பரியம் கூறுகின்றது. அர்ச். பிரான்சீஸ் சவேரியார் யாழ்ப்பாணம் வந்து வேதம் போதித்தாரென்றும், இங்குஅவர் இராசமாளிகை சென்று சங்கிலிஅரசனின் குமாரனை மனந்திருப்பி எமதுதிருவேதத்திலே சேர்த்தாரென்றும், பின்னர் இந்த அரசகுமாரன் வேதசாட்சியாய் மரித்தாரென்றும் இன்னும்ஓர்பாரம்பரியம் கூறுகின்றது. அர்ச். பிரான்சீஸ் சவேரியார் யாழ்ப்பாணம் வந்திருப்பாராயின் அவர்எங்கே தங்கியிருந்திருப்பாரென்பதை வண. ஞானப்பிரகாசசுவாமியார் ஆராய்ச்சிசெய்து தற்போதுநல்லூரில் அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் கோவில்நிலையமே அவ்விடமாயிருக்க வேண்டுமென்று யூகித்தார். ஆகவே அர்ச். பிரான்சீஸ் சவேரியார் விசுவாசமென்னும் சிறந்தகொடையை நமது செல்வநாட்டுக்கு அளித்ததின் ஓர் ஞாபகசின்னமாயும், நன்றிச்சின்னமாயும் இதுவிளங்குகிறதென்பதை எவருமே ஒப்புக்கொள்வார்கள்.

அந்தநன்றியுணர்ச்சி யாழ்ப்பாணப் பட்டணத்தின் நாலுபகுதியிலும் எத்துணைவிரைவாகப் பரந்துவருகின்றதென்பதற்கு எமது கோவிலில் வெள்ளிக்கிழமைதோறும் எவருமே காணும்காட்சியே நற்சான்றாகின்றது. இப்பத்திஅனுசாரத்தின் ஆரம்பம் மிகச் சிறிதாயிருந்தது. ஒரேயொரு குடும்பம் கிழமைதோறும் வெள்ளிக்கிழமைவந்து கோவிலில்செபித்தது. சிலகாலமாக இப்படித்தனித்துவந்த பின்னர் சுவாமியாரைநோக்கி, அர்ச். சவேரியார்பக்தியை வெள்ளிக்கிழமைதோறும் அனுசரித்துவரும்படி பலரையும் ஏவிவரலாமோஎன்று கேட்டார்கள். அதற்குச்சுவாமியார், நீங்கள் அர்ச். சவேரியாரின் மகிமைக்காகச்செய்யும் எதற்கும் தாம்பக்கதுணையாய் நிற்பதாகத் தெரிவித்தார். படிப்படியாக இப்பத்தி வெகுவாக வளர்ச்சியடைந்தது. முதல் அந்தக் குடும்பத்தினரின் அயலட்டமுழுவதிலிருந்தும் பின்பு அக்குறிச்சி முழுவதிலிருந்தும், கடைசியாக இப்போது யாழ்ப்பாணப்பட்டணத்தின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள்வந்து ஒன்றுகூடக் காண்கிறோம். நல்லூர் மீசாமுக்குச்சேர்ந்த கோவில்கள் சற்றே தூரத்தில்இருப்பினும் இந்தமீசாங்கிறீஸ்தவர்களும் தங்கள்தாய்க்கோவிலில்நடக்கும் பத்திமுயற்சிகளில் பங்குபற்றுகின்றனர். அயல்மீசாம்களாகிய சுண்டிக்குளி, பாஷையூர், ஆனைக்கோட்டையும் பங்குபற்றிவருகின்றன. இப்பக்திபரம்பிவரும் விதத்தை அவதானித்தஒருவர், அர்ச். சவேரியார் பத்தி அவர்காலிலிருக்கும் நெண்டுக்கால்போல் சுழன்று நாலுதிசைகளையும்நோக்கிப் பரம்புகின்றதென்றார். வெள்ளிக்கிழமைகளிலே அவர்பேரால் நேர்த்திக்கடன்நோவனைகளும், வேஸ்பரும் நடத்தும்படியாகப் பலர்கேட்கின்றார்கள்.

எமதுஉபகாரிகளுக்கு எம்நன்றியைக்காண்பிக்க இத்தினங்கள் தகுந்த சந்தர்ப்பங்களெனக் கருதுகிறோம்.

---

மற்றோர் யாத்திரை ஸ்பெயினிலிருந்து கருதினல் செகுரு ஆண்டவரது தலைமையின்கீழ் நடந்தேறவிருக்கிறது.

அத்தினங்களிலே அவர்களுக்காக விசேஷவிதமாக நாங்கள்மன்றாடுவதுமன்றி அவர்கள்அனுப்பும் விண்ணப்பங்களையும் அர்ச். சவேரியார்பாதத்தில்வைக்கிறோம்.

**வியாகுலமாதா சுற்றுப்பிரகாரம்:** எமதுகிறீஸ்தவர்கள் ஞாயிறுகடன் பூசையோடுவிடாது சிலபத்திஅனுசாரங்களையும் கற்றுக்கொள்ளவேண்டுமென ஆசிக்கிறோம். இதன்பொருட்டு இவ்வருடம் வியாகுலமாதாதிருநாளை இங்குகொண்டாட எண்ணுகிறோம். ஆனால், ஆறுமகிழமையன்று அல்ல. ஏனெனில், அன்று இளவாலைக் கல்லறைமாதாகோவில், யாழ்ப்பாணம் அடைக்கலமாதாகோவில்முதலாம் பதிகளிலே இத்திருநாள் மிகப்பத்திச்சிறப்பாய் நெடுங்காலமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. அதனால், ஐந்தாம் வெள்ளிக்கிழமை பங்குனி மாசம் 9-ந்திகதி விராலுக்குத்தக்கவீக்கம்என்றபடி ஒருசின்னச் சுற்றுப்பிரகாரம், ஒப்பாரியுடன் கல்லறைத்தரிசனைமுதலியன நடைபெறும்.

**வரப்பிரசாதநவநாள்: அர்ச். சவேரியார்பேரால் வருடாவருடம் நடைபெற்றுவரும் வரப்பிரசாத நவநாள்பங்குனி மாசம் 4-ந்திகதி ஆரம்பமாகிப் 12-ந்திகதி சாயந்தரம் சுற்றுப்பிரகாரத்துடனும், 13-ந்திகதிகாலை திவ்வியபூசையுடனும் முடிவாகும். வழமைப்பிரகாரம் பாடசாலைப்பிள்ளைகளும், பத்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், அர்ச். சவேரியாரின் பக்தர்கள்பலரும் இதிலே பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கின்றோம்.**

தபசுகாலமும ஞானஒடுக்கமும்—எமதுமீசாமிலே பலகோவில்கள்இருப்பினும் ஒவ்வொருகோவிலிலும் ஞானஒடுக்கம் நடப்பதுவழக்கம். இவ்வருஷம் உரும்பராயில ஞானஒடுக்கமுடிவிலே 175 பேர்வரையில் உறுதிப்பூசுதல்பெற்றனர். உறுதிப்பூசுதல்முடிந்தபின் இவ்வூர்க்கிறீஸ்தவர்கள் மேற்றிராணியாண்டவர் அவர்களுக்குத் தங்கள்நன்றியைக் காணபிக்கப் பாடசாலையிலே தபசுகாலத்துக்கேற்ற ஒருசிறு வரவேற்புஉபசாரணை நடத்தினார்கள். அவ்வேளை அப்பெரிய பாடசாலையில் குழுமியிருந்த ஐஞ்ஞூற்றுக்கதிகமானோருள் ஆரம்பத்திலே இவ்வூரில் ஞானஸ்நானம்பெற்ற வயோதிபாஒருவர் ஆண்டவர் அவர்களுக்கு மாலைசூட்டினர். முப்பதுவருடங்களுக்குமுன் ஒருகத்தோலிக்க குடும்பமும் இல்லாதிருந்தஇடத்திலே தற்போது ஒருசெழிப்பான கத்தோலிக்ககிராமம் இருப்பதைக்காணும் எவருடைய இருதயந்தான் ஆனந்தங்கொள்ளாதிருக்கும்? தேவனின் இராச்சியம் மேலும்மேலும் பரம்புவதாக.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

—"மூன்றாவது உலகயுத்தமொன்று தடுத்துவிடப்படக்கூடியஓர்நிலைமையை நாம் படிப்படியாக அடைந்துகொண்டு வருகிறோம்"எனச் சென்றபுதன்கிழமை வாஷிங்ரன்நகரிலே பிரசாதிபதி ட்ரூமன் அவர்கள் நிகழ்த்தியஓர்சொற்பொழிவில் தெரிவித்திருக்கின்றார். மனிதரையும், பொருட்களையும் திரட்டுவதிலே தற்போதுசெய்யப்படும் பிரயத்தனமெல்லாம் முற்றுமே யுத்தத்தைத் தடுப்பதற்கான ஓர்முயற்சியேயென்றும் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கணகட்டுவித்தையன்றி வேறல்ல

நியூயோக், மாசி 18.

“மஸ்கோவழிசெல்லும் கம்யூனிஸ்தர்கள்சொல்லும் ‘அமைதியான புரட்சி’ என்பதெல்லாம் வெறும்கண்கட்டுவித்தையே அன்றி வேறல்ல. உண்மையில் கம்யூனிஸ்தர்களின் நாட்டம் யுத்தமே.” மேற்கண்டவாறு இத்தாலிய கம்யூனிஸ்த கட்சியிலிருந்து சமீபத்தில் இராசிநாமாச்செய்த வால்தோ மக்ஞானி, ஆல்தோ கூச்சி ஆகிய இருபிரபலஸ்தரும் கூறுகின்றனர். மக்ஞானி, கூச்சி ஆகியஇருவரும் இத்தாலிய பாராளுமன்ற அங்கத்தினர்கள். இவர்கள் தற்போது அறிக்கைசெய்துள்ள பிரசுரத்தில் தான், கம்யூனிஸ்தர்களின் சமாதான பசப்பல் வண்மையாகக் கண்டிக்கப்படுகிறது. இத்தகவலை நியூயோக்ரைம்ஸ் பத்திரிகையின் ரோமைநிருபர் அறிவிக்கிறார். மக்ஞானி-கூச்சி கூட்டறிக்கையில் மேலும்கண்டிருப்பதாவது: “இத்தாலியில் கம்யூனிஸத்தைநிலைநாட்ட வெளிநாட்டு ஆயுதப்படையெடுப்பையே இத்தாலிய கமயூனிஸ்ததலைவர்கள் நம்பியுள்ளனர். இக்கொள்கையை எதிர்த்தே நாங்கள் கட்சியிலிருந்து விலகினோம். யார்படையெடுத்தாலும் அப்படையெடுப்பு கம்யூனிஸ்தத்துணையோடோ, தூண்டுதலோடோ இருந்தாலும்கூட, அதைஎதிர்த்து இத்தாலியகம்யூனிஸ்தர்களும் ஏனையதங்கள் நாட்டவரைப்போல் தாய்நாட்டைக் காக்கவேண்டும்.”

## ஸ்ராலினின் பிரசாரவெடி

வாஷிங்ரன், மாசி 19.

யுத்தம் தவிர்க்கமுடியாத தல்லஎன ருஷியாநம்புவதாக அதன் பிரதமர் ஸ்ராலின் “பிராவ்டா”ப் பத்திரிகை நிருபர்கள்பேட்டியில் தெரிவித்ததைச் சொல்லளவில்அல்லாமல் செயலளவில் நிரூபணம் செய்துகாட்டும்படி பிரபல அமெரிக்கபத்திரிகைகள் தலையங்கம் தீட்டியுள்ளன. சோவியற்பிரசார பழையபல்லவியைத் தவிர்த்துப் புதிதாக உருப்படியாகஒன்றும் அதில் இல்லையென்று அ. ஐ. தேச பத்திரிகைகள் பொதுவாகக் கருதுகின்றன.

நியூயோக் ரைம்ஸ்: ஸ்ராலின் மனப்பூர்வமாகச் சமாதானத்தை விரும்பினால் அதற்கு ஒருதடையுமில்லை.

வாஷிங்ரன் போஸ்ற்: ஐரோப்பாவில் கம்யூனிஸ்தகட்சி ஆட்டங்கண்டிருக்கிறது. அதைப்பூசிமெழுகி உற்சாகப்படுத்தவே ஸ்ராலின் இந்தப்பிரசாரவெடி போட்டிருக்கிறார்.

நியூயோக் ஹறல்ட் ரிறிபியூன்: வாய்வீச்சுக்குப்பதிலாகச் செயலளவில் தமதுசமாதானஆர்வத்தை ஸ்ராலின் வெளிக்காட்டவேண்டும்.

## உபதேசஞ்செய்வதில் குறைவில்லை

நியூயோக், மாசி 19.

“போர்மோசாக் குழந்தைகளுக்கு ஐ. நா. சிசுசகாயஸ்தாபனம் உணவு உதவியளிப்பதைச் சோவியற்பிரதிநிதி கடுங்குரலில் ஆட்சேபித்தார். இந்த ஸ்தாபனத்திற்குச் சோவியற் அரசு தம்படிகூடக் கொடுத்ததில்லை. ஆனால், அதுதாராளமாக ஊருக்கு உபதேசம் செய்வதில் குறைச்சலில்லை. நான்கு வருடங்களுக்குமுன் இந்த ஐ. நா. கிளைஸ்தாபனம் நிறுவப்பட்டது. இதன்செலவுக்குப் 15 கோடிடலரை மற்ற 48அங்கத்துவநாடுகளும் உதவியுள்ளன. பாதித்தொகைக்குமேலாக அமெரிக்காதந்திருக்கிறது.” இவ்வாறு நியூயோக் ரைம்ஸ் சோவியற்போக்கை விமரிசனம்செய்திருக்கிறது.

## சமாதானத்தை நிலைநாட்டுவதே

நியூயோக், மாசி 23.

கம்யூனிஸ்தர்கள் ஆத்திரமூட்டி வருகிறபோதிலும், “சரணாகதியோ அல்லது தாஜாபண்ணுவதோ” இன்றி உலகசமாதானத்தை நாட்டமாகக் கொண்டு உழைத்துவருவதே அமெரிக்கவரசு தொடர்ந்துகைக்கொள்ளும் வெளிநாட்டுக்கொள்கை.—இவ்வாறு இங்கு யூனியன்கல்லூரியிலே பேசுகையில் அ. ஐ. தேச விசேஷஸ்தானீகர் திரு. பிலிப் ஸி. ஜேசப் குறிப்பிட்டார். மேலும் அவர்கூறியதாவது: பலவானாலேயே சமாதானத்தைக் காக்கமுடியும் எனும் கொள்கையில் அமெரிக்கமக்கள் பரிபூரணமாக நம்பிக்கைகொள்ளுகின்றனர். நமது மார்க்கம் சமாதானமார்க்கமே. சமாதானபாதை நீண்டகடுமையானபாதைதான். ஆனால், அதற்காக அமெரிக்கவரசு போரில்குதிக்காது. அவசியப்பட்டால்தான் நீதியையும், விடுதலையையும்பாதுகாக்க அமெரிக்கவரசு போராடும்.

## மத்தியகிழக்கு நாடுகள்

இஸ்தன்பூல், மாசி 23.

மத்தியகிழக்குநாடுகள் தங்கள்பிரதேச பொதுப்பாதுகாப்பு, உலகபாதுகாப்பு ஆகியஇரண்டின் அவசியத்தையும் மேலும்மேலும் உணர்ந்துவருகின்றன. துருக்கி, கிறீஸ், பார்சீகம்ஆகியன கடந்தஆண்டில் அடைந்த தற்காப்பு நிர்மாண அபிவிருத்தி “சிறப்பாகத் திருப்தி அளிக்கிறதுஎன்று இஸ்தன்பூல்நகரில் நடந்த அ. ஐ. தேச இராசதந்திரிகளின் மகாநாடு அதிகாரபூர்வமான அறிக்கையைவெளியிட்டுள்ளது. தற்காப்புப்பிரச்சினையானது, பொருளாதார அபிவிருத்தியை அடியோடு மறைத்துவிடக் கூடாதுஎன்றும், அத்துறையில் அமெரிக்கவரசு உருவான ஆதரவைப் பலவகைகளிலும் வெளியிட்டிருக்கிறதுஎன்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

## அமெரிக்க ஜனநாயக சிற்பி

மாசி 22-ந் திகதி அமெரிக்கஐக்கிய தேசப்பிதா ஜோர்ஜ்வாஷிங்ரன் அவர்களின் பிறந்தநாள். இவர் 1789-ம் ஆண்டு முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது பெயர்பூண்டு இலங்கும் வாஷிங்ரன் நகரானது இவர் எங்குவாழ்ந்து, உயிர் நீத்தாரோ அந்தப் பண்ணைக்கருகே உள்ளது. அமெரிக்க சுதந்திரப்போர் நடக்கையில் தேசியவீரனாக விளங்கிய தளபதி ஜோர்ஜ்வாஷிங்ரன் அவர்கள் நாடு சுதந்திரம்எய்தியபின்னர் முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேசப்பிதாஎனும் பெருமைக்கு உரியவரானார். குழந்தைப்பருவத்திலிருந்த அமெரிக்க அரசாங்கத்தைச் சரியானபாதையிலே நிலைநிறுத்திய பெரியார்இவரே. அ. ஐ. தேச அரசியல்சட்டத்தைத் திட்டமிட்டுத் தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு அடிகோலியதில் இவருக்கு இணையானவர் இவரே. எட்டு ஆண்டுகளாக இவர் ஜனாதிபதிபதவி வகித்தார். புத்தம்புதிதாகத் தோன்றிய அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கைபலப்படச்செய்தது இவரது மகத்தானசாதனைகளில் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. நிர்வாகம்நடத்துவதில் நிபுணர் இவர். நீதிநெறிவழியிலிருந்து இழைபிறழாத பெரியார்இவர். சமூகத்திற்குச் சலுகைகள்அளிப்பதில் இவர் பாரபட்சமே காட்டியதில்லை. அன்றுபோல்என்றும் சனங்களின்உள்ளத்திலே இவர் சிரஞ்சீவியாய் வீற்றிருக்கக்காரணம் இதுவே. தேசிய ஐக்கியத்திற்காக இடையறாதுஉழைத்த வாஷிங்ரனின் தேகம் வயதுகா[illegible]யடைந்தது. அரசியலிலிருந்து ஓய்வு எடுத்துத் தமது பண்ணைத்தோட்டத்தைக் கவனித்துக்கொண்டு இருக்கலாமென எண்ணினார். ஆனால், சகாக்கள் விடவில்லை. பலத்த வற்புறுத்தலின் பேரில் தொடர்ந்து மறுநான்குஆண்டுகள் ஜனாதிபதிபதவிஏற்றார். ஜனாதிபதி என்றால் அந்தப்பதவி ஜோர்ஜ்வாஷிங்ரனுக்கே தகும்என்று மக்கள்மனமார அஞ்சலிசெலுத்துகின்றனர்.

(யூஸிஸ்)

ஊர்காவற்றுறை

அர்ச். அந்தோனியார் ஆலயத்தைச்சேர்ந்த
கிறீஸ்தவர்களில் ஒருவரான

**ஸ்ரீமதி அந்தோனியாப்பிள்ளை இராசமுத்து**
**சூசைப்பிள்ளை அவர்கள்**

மரணத்திரையில் மறைந்த

# முதலாம் வருட ஞாபகம்

பிறப்பு—14-6-1898
இறப்பு— 7-3-1950

அந்தோ! உமைநினைந்து ஆறாத் துயர்பெருக
வந்து விழுந்ததையோ வன்பிரிவு—எந்தவிதம்
தாங்கி உளந்தரிப்போம் தாயே!நாம் உம்பிரிவால்
ஏங்குகுதே உள்ளம் இரங்கி.

ஆண்டொன்று கழிந்தோடி மறைந்ததன்றோ
ஆருயிரே! அன்னையரே! கவலைமேலும்
ஈண்டெழுது தையையோ பிரிவால் மக்கள்
என்றுமே கவலையினுள் மூழ்கின்றோமே.

என்றும் எங்கள்நினைவைவிட்டு அகலாதவிதமாக எங்களைநேசித்துவந்த நேசமனைவியும், அருமைத்தாயாருமான ஸ்ரீமதி சூ. அ. இராசமுத்து அவர்கள் இறைவனடிசேர்ந்த முதல்ஆண்டு நிகழும் 7-3-51 பூர்த்தியாவதால் அன்று தினம் காவலூர் அர்ச். அந்தோனியார்ஆலயத்தில் அன்னவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிறைவேறவிருக்கும் திவ்வியபூசைப்பலிக்கு இனசனரையும், மற்றும்நண்பர்களையும் சமூகமளித்து, அவவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவுடன்கேட்டுநிற்கிறோம்.

இதைக்காணும் வண. குருப்பிரசாதிகளே! சங். சந்நியாச, கன்னியாஸ்திரீமார்களே! அவவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் மனம்நொந்து வாடிவருந்தும்,

**நேசகணவரும், பிரிய புதல்விகளும், அருமை பேரப்பிள்ளையும், மருகனும்.**

**R. I. P.**

Mal. No. 475. Eng.

## தொகைமதிப்புகளும் துயினனும், உண்மையும்

தொகைமதிப்புகள் மங்குளமும், திட்டமுமானபாஷையை வெளியிட்டபோதிலும் அவைகள் பலமுறைகளிலே நிராகரிக்கமுடியாத அத்தாட்சியைஉதவுவதில் வாய்ப்பாயிருக்கின்றன. செலவாகும்அளவு, உற்பத்தியின் அதிகரிப்பு ஆதியவற்றைப் பொருள்வகைகளின் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக் கொண்ட அறிக்கையைக்காட்டிலும் அதிகம்தெளிவாக வேறேதும் காண்பிக்கமாட்டாது. நோய்களினதும், விபத்துகளினதும் மிகுதிமட்டிலும் இது பொருத்தமானது.

இரண்டாவது உலகயுத்தத்துக்கு முன் கல்கத்தாவில்நடந்தேறிய விஞ்ஞானமகாநாட்டின் கிருமிசாஸ்திரபிரிவானது மனிதசமூகத்திற்குத் தீங்குவிளைக்கும் கிருமிகளைப்பற்றி ஓர் அறிக்கைசமர்ப்பித்தது. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கிருமிகள் வருடந்தோறும் 15 லட்சத்துக்குக்குறையாத மரணங்களுக்குக்காரணமானதென்றும், ஒவ்வோர்வருடமும் 15 கோடிபவுணுக்குப் பொருட்சேதங்களை உண்டுபண்ணுகின்றனஎன்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் செய்துள்ளமுடிபு யாதெனில், யுத்தங்களாலும், பலவிதஇடையூறுகளாலும், பெருந்தீமைகளாலும் உண்டாகக்கூடியனவாய் இருந்தனவற்றைக்காட்டிலும் அதிகமான பொருட்செல்வத்தின் அழிவுக்கும், மனிதஉயிர்களின் சிதைவுக்கும் கிருமிகளே உத்தரவாதமாகக் கொள்ளப்படவேண்டும் என்பதே.

கிருமிகளால்உண்டாகும் நோய்களில் மலேரியாவானது அனோப்பிலே எனும் பெண்நுளம்பினால் கொண்டுசென்று பரப்பப்படுவதாகும். முன்காட்டியஅறிக்கையானது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மலேரியாவால் பீடிக்கப்பட்டு அந்தவருடங்களிலே பத்துக்கோடிமக்கள் வருந்தினார்கள் என்பதையும், இந்தநோயின்விளைவாக ஒவ்வோர்வருடமும் பத்துலட்சம மக்கள்வரையில் மடிந்தார்கள் என்பதையுமே குறிப்பிட்டிருக்கிறது.

கருமம்எவ்வாறிருப்பினும் மலேரியாவானது போரானகுயினைன்எனும் மாற்றுமருந்தால் குணமாக்கப்படத்தக்கது. முந்தியசர்வதேசசங்கத்தாலே நியமனஞ்செல்யப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியானது 1938-ம் ஆண்டு வெளியிட்ட ஓர்அறிக்கையிலே மலேரியாவராமல்தடுக்கும் ஓர் நடவடிக்கையாக மலேரியாக்காலமுழுவதிலும் தினமும் ஆறுகிறேய்ன் குயினைன் அருந்திவரவேண்டுமென ஆலோசனைகூறியிருக்கிறார்கள். ஓர்கால்மலேரியா காணுமிடத்து அதனுடன் போரிடும் ஓர்உபாயமாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் அருந்தவேண்டுமென்று சிபாரிசுபண்ணியிருக்கிறார்கள். மலேரியாவை எதிர்த்து நடத்தும் படையெழுச்சியானது இந்தச்சுகபங்கமான புல்லுருவியை எதிர்த்து மனிதன்நடத்தும் ஓர்போராட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிகோணமலை மேற்றிராணியாண்டவரின்
# தபசுகால ஆயர் நிருபம்

(முன்தொடர்ச்சி)

யேசுக்கிறீஸ்துநாதரில் எமக்கு அருமையான பிள்ளைகளே! உங்கள் மேய்ப்பர்கள் தங்களைத்தாபரிக்கும்படி உங்களிடம்கேட்கும்போது, அவர்கள் அளவுகடந்தவசதிகளைக் கேட்கவில்லை. இம்மேற்றிராசனத்தில் கட்டளைக்குருமாருக்கும், அவர்களின் உதவிக்கட்டளைக்குருமாருக்கும் அவர்களுக்குரிய பொதுவான வசதிகள்தானும் இல்லை. சிலருக்குச் சீவிக்க ஓர்வீடில்லை. ஒருவர் ஓலையால்வேய்ந்த ஒருஅறையையுடைய சிறுவீட்டில் சீவிக்கின்றனர். மற்றொருவர் சிறிதுகாலத்துக்குமுன் ஒழுகும் கூடாரம்ஒன்றில் சீவித்தனர். இன்னுமொருவர் ஓர்சிறுகோவில் அறையில் சீவிவிக்கின்றனர். சிலர் வேலைக்காரர் இன்றியும், நாளாந்த உணவைத் தருமசிந்தையுள்ள குடும்பங்களில் இருந்து முறையாகப்பெற்றும் சீவிக்கின்றனர். பலமுறை கட்டளைக்குருமார் பூசையால்வந்த வருமானத்தைக் கோவில்தாபரிப்புக்கே செலவிட்டபடியால் தங்களுக்குவேண்டிய உடுப்பை நம்மிடம்கேட்டுப் பெற்றுக்கொண்டனர். நோய்ஸ்தாபிக்கப்பட்ட பழையவிசாரணைப்பகுதிகளிலும் குருமார் கட்டுமட்டாய்ச் சீவிக்க வேண்டியிருக்கின்றது.

எமது அருமையான பிள்ளைகளே! உங்கள்மேய்ப்பர்கள் அதிகவசதிகளை உங்களிடம்கேட்கவில்லை. அவர்கள் தங்கள் இவ்விதநிலைபரத்தைப்பற்றி முறையிடவுமில்லை. அவர்களோ நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் தரித்திரத்தில் பங்குபெறவிரும்புகின்றனர். தங்கள்நிலைபரத்துக்கு ஏற்றபடி பொதுவானவசதிகளோடு சீவிப்பதற்கே உங்கள்உதவியைக் கேட்கின்றனர். உங்கள்பகுதிக்கோவிலை நோய்ப்பழுதபார்த்துத் தேவஆராதனைக்கேற்றஇடமாய் வைத்துக்கொள்ளும்படியே உங்களிடம்கேட்கின்றனர். உங்கள்பகுதியில் வெகுஎளியநிலைபரத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிக்கவே உங்கள்உதவியை விரும்புகின்றனர். சுருங்கச்சொல்லில் கிறீஸ்துநாதருக்கும், உங்களுக்கும் ஊழியஞ்செய்வதற்கு உங்கள்உதவியைக் கேட்கின்றனர்.

## திருச்சபையின் ஐந்தாம்கற்பனை

குருமாரைத்தாபரிக்கும்படி விசுவாசிகளைத் தூண்டும் நியாயங்கள் அவ்வளவு பெலன்உள்ளவைகளாய் இருக்கிறபடியால், அர்ச். தோமாஸ் அக்குவீனாஸ்முதலிய வேத சாஸ்திரிகள் இந்தக்கடமை சுவாபமுறையில் இருந்துவரும் ஓர்கடமையென்று கற்பிக்கின்றனர். ஆதலால் இவ்விஷயத்தைப்பற்றிய திருச்சபையின்கற்பனைகள் இல்லாவிட்டாலும் விசுவாசிகள் தங்கள்குருமாரைத் தாபரிப்பதற்கு மனச்சாட்சியில் கடமைப்பட்டவர்களாகவே இருப்பார்கள். இவர்களின்தாபரிப்பு நீதியின்நிமித்தம் கொடுக்கப்படவேண்டியது. ஓர்ஒழுங்கின்படியும், சட்டத்தின்படியும், பிறர்சிநேகத்தின்நிமித்தமும் கொடுக்கப்பட வேண்டியதில்லை. இந்தமேய்ப்பர்கள் உங்களுக்குத் தொண்டுசெய்யும்படி தங்களாமேல நியமிக்கப்பட்டவர்களல்ல. இவர்கள் திருச்சபையின் முறையான அதிகாரத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். கத்தோலிக்கர்எல்லோரும் இந்தஅதிகாரத்தை மதிக்கவும், அதற்குக்கீழ்ப்படியவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் எவருக்குக்கட்டாயமாய் ஊழியஞ்செய்கிறார்களோ அவர்களால் நீதியின்படி தாபரிக்கப்படவும்வேண்டும். இந்தக்கடமையின்மட்டில் விசுவாசிகளின் மனதிலுள்ள சந்தேகங்களைஎல்லாம் நீக்கவும், தனதுகுருமாரினதும், ஸ்தாபனங்கள் தருமஅலுவல்களினதும் தாபரிப்பை நிச்சயப்படுத்தவும் திருச்சபையானது இந்தக்கடமையைத் தனதுகற்பனையில் ஒன்றாக ஏற்படுத்தியிருக்கின்றது. திருச்சபையின் ஐந்தாம் கற்பனையானது விசுவாசிகளைத் தங்கள் மேய்ப்பரின் தாபரிப்புக்காக உதவி செய்யும்படி கடமைப்படுத்துகின்றது.

நமதுஞானோபதேசக் குறிப்பிடமானது ஒவ்வொருகத்தோலிக்கரும் அல்லது ஒவ்வொருகுடும்பமும் தன் தன் இயல்புக்குஏற்றபடி திருச்சபையின் தாபரிப்புக்காக உதவிபுரிய வேண்டுமென்று படிப்பிக்கின்றது. ஆதலால் இது ஒருவரின்விருப்பத்துக்குரிய அலுவலுமல்ல. இதுவோர் தருமச்செயலுமல்ல. இது இவைகளிலும் மேலானது. இது உங்களைமனச்சாட்சியில் கடமைப்படுத்தும் ஓர் அலுவல். இப்படிச் செய்யாமல்விடுதல் சருவேசுரனுடையவும், திருச்சபைஉடையவும் கட்டளையைமீறுதல்போன்ற பாவமாகும். கடவுளர்க்குஎதிரான நிந்தனையும்ஆகும். சிலதருணங்களில் இந்த நிந்தனை ஓர்பெரிய அல்லது சாவான பாவமாகவும் வரும். இவ்விதமே சீவனத்துக்கு வழியின்றிவருந்தும் ஓர் கட்டளைக்குருவின் தாபரிப்புக்கு உதவி செய்யக்கூடிய ஒருவர் செய்யாவிடில் சாவானபாவத்துக்கு ஆளாவர். இந்த மேற்றிராசனத்துக் கட்டளைக்குருமாரின் சீவனத்துக்குப் பிறதேசத்தினரின் தருமக்கொடை தேவைப்படுவதால் அவர்களில்அநேகர் சீவனத்திற்குவழியின்றி வருந்தவும்நேரிடும். பிறதேசத்தில் இருந்துவரும்உதவி குறையக் குறையக் குருமாரைத் தாபரிக்கும் கடமை வளர்ந்துகொண்டே வரும். ஆதலால் ஐந்தாங்கற்பனையை எவ்விதம் அனுசரிக்கிறீர்கள்என்று கவனமாய்ப் பரிசோதித்துப்பாருங்கள். உங்கள் கடமையை நிறைவேற்றத்தீர்மானியுங்கள். இது உங்கள் மனச்சாட்சியின் கடமை. உங்கள் நித்தியஇரட்சணியத்துக்காக முயற்சிசெய்யும் மேய்ப்பர் பட்டில் நீங்கள் செலுத்தவேண்டிய கடமை.

## குருதாபரிப்புப் பணம்

தங்கள் கட்டளைக்குருமாரைத் தாபரிக்கும்கடமையைச் செய்கைமுறையில் எப்படிவிசுவாசிகள் நிறைவேற்றக்கூடும்? ஐந்தாம்கற்பனையில் கொடுத்திருக்கும் விளக்கமின்றித் திருச்சபை வேறுவிளக்கம் கொடுக்கவில்லை. ஒவ்வொருமேற்றிராசனமும் தன்தன் நிலைபரத்துக்கும், தேவைக்கும் பொருத்தமான முறையை நியமிக்கலாம்.

திருச்சபையில் ஆதிகாலத்தில் எவரும் விரும்பிக்கொடுத்த தருமக்கொடைகள் தேவ ஆராதனைக்கும், குருமாரின்தாபரிப்புக்கும் போதியவையாய் இருந்தன. ஆனால், சத்தியசமயம் ஐரோப்பாக்கண்டம் எங்கும் பரந்தபோது ஓர் நிலையானஏற்பாடு வேண்டியதாய்இருந்தது. இவ்விதமே அந்தக்காலத்தில்தான் "முதற்பலன்" கொடுக்கும்முறை ஏற்படுத்தப்பட்டுப் பொதுவழக்கமாய்அமைந்தது. "முதற்பலன்" ஆவது ஒருவருக்கு நீதியாய்க் கிடைக்கும்எல்லாப்பிரயோசனத்திலும் வருமானத்திலும் பத்திலொருபங்கு ஆகும். சருவேசுரனுக்கு மனிதர்மேல் உள்ள மேலானஅதிகாரத்தை அங்கீகரிக்கும்நோக்கமாய் இது அவருக்குச் செலுத்தப்பட்டு, அவரின்பிரதிநிதிகளாகிய திருச்சபையின் குருமாருக்குக் குக் கொடுக்கப்படுகின்றது. இக்காலத்தில் "முதற்பலன்" என்னும் சொல் சற்றுவிரிவான கருத்தை உடையதாய்க் கட்டாயம் பத்திலொருபங்கையல்ல, ஒருபங்கைக் குறித்துக்காட்டும். இந்தக்கருத்தோடுதான் இந்தச்சொல் நமது தமிழ்ஞானோபதேசக் குறிப்பிடத்தில் காணப்படுகின்றது.

(தொடரும்)

# ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

மங்கோலியரின் தலைவனான தர்மோலின் என்பவன் பலமுறை போரில்தோல்வியுற்றான். இனிச்செய்வது என்னவென்பதை ஆராயும்பொருட்டு அவன் தனதுசங்கத்தைக்கூட்டி ஆலோசனைசெய்யத் தொடங்கினான். அப்படி ஆலோசனைசெய்து கொண்டிருக்கும்வேளை அவன் தனதுகூடாரத்தில் ஒருஎறும்பு ஏறிக்கொண்டிருப்பதைக் கண்டான். கொஞ்சத்தூரம் ஏறியபின்பு எறும்பு கீழேவிழுந்தது. விழுந்தஎறும்பு அதைரியப்படவில்லை. அதுமீண்டும் ஏறியது. மீண்டும் விழுந்தது. இப்படி அது பத்துமுறை ஏறிப்பார்த்துப் பத்துமுறையும் விழுந்தது. பின்புஅதுதிரும்பவும்ஏறி நிலத்தில்விழாது குறித்தஇடத்தை அடைந்தது. அதன்மேல் தர்மோலின் தான் என்னசெய்யவேண்டுமென்பதற்கு அவ்வெறும்பின்செயலில் ஒருகுறிப்பறிந்து மீண்டும் போர்புரியத் தீர்மானித்தான். தீர்மானித்துச் சத்துருவைத் தாக்கினான். இப்போரிலும் தோற்றுப்போனான். ஆனால், மீண்டும்மீண்டும் போராடி ஈற்றில்வெற்றிபெற்றான். அப்படியே நீயும் மீண்டும் மீண்டும் தவறிப்போனாலும் மீண்டும்மீண்டும் எழுந்து உனது பிரதிக்கினையைப் புதுப்பித்துக்கொள். உனது போராட்டங்களில்ஒன்றுகடைசியாய் வெற்றிப் போராட்டமாகும்.

### "கடைப்பிடி யுள்ளவர்கள் வெற்றிபெறுவார்கள்"

தைரியமாய் உன்வேலையிற் கையிடு. "கொட்பிறிடிபுய்யோண்" இருபத்தைந்துமுறை ஜெருசலேம்நகரத்து மதில்களைத்தாக்கினார். இருபத்தைந்துமுறையும் அவர்பிரயாசை வீணாய்ப்போனது. அவருடைய போர்வீரர் மனங்களைத்து "அதுவாய்க்காது," "வாய்க்காது" என்று ஓலமிட்டனர். அவரோ "அதுவாய்க்கும் வாய்க்கவேண்டும்", தைரியமுள்ளவர்கள் என்பின்னே வருவார்களாக என்றுசொல்லிக்கொண்டு இருபத்தாறும்முறை சுவர்களில்சாத்தப்பட்டஏணிகளின்மேல் தமது பெல்ஜியசிலுவையுடன்ஏறி நகரத்தைத்தாக்கினார். ஜெருசலேம்அவர்கைப்பட்டது. கடைப்பிடியுள்ளவர்களுக்கே வெற்றியாயிற்று.

II

"நான் பரலோகத்துக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என என்பிதாவுக்குச் சொல்லுவேன்."

இழந்துவிட்ட இஷ்டப்பிரசாதத்தைமீண்டும்அடைந்துகொள்ளும்படி ஊதாரிப்பிள்ளையைப்போல் நீயும் உனது பாவங்களை அறிக்கையிட வேண்டும். பாவசங்கீர்த்தனம் கபடில்லா வெண்மனத்துடன் செய்யப்படுதல் வேண்டும். ஒருகுழந்தைப்பிள்ளையைப்போல் பாஷை அலங்காரத்தைக் கவனியாது உனது பாவங்களைச்சொல்லு. இரக்கமும் அனுதாபமுமுள்ள ஒரு வைத்தியனுக்கு ஒருநோயாளன் தன் துன்ப வருத்தங்களையும், தனது காயங்கள்புண்களையும் தெரிவிப்பதுபோல் நீயும்செய். இப்படிச்செய்வதற்கு உனது விசுவாசசிந்தையை அதிகரிப்பிக்கப் பிரையாசப்படு. ஆத்துமகுருவானவரில் யேசுநாதரை அல்லாது வேறுஎவரையும் கண்டுகொள்ளாதே. குருவானவர் பாவசங்கீர்த்தனம் கேட்பது இரக்கம் செலுத்துவதற்கேயாம. உன்னைப்போல்அவரும் ஒருபாவி. ஆதலால் உன்னைப்போல் அவரும் இரக்கத்தைவேண்டிநிற்பவர்.

பாவசங்கீர்த்தனத்தில் ஒருபோதும்பிறரைக் குற்றஞ்சாட்டாதே. ஒருமனைவிதனதுபாவங்களின்கனத்தைக் குறைத்துவிடும்படியாகப் புருஷனில்குற்றஞ்சாட்டினாள். குருவானவர் அவளுடைய பாவங்களுக்காக மூன்று பிரியதத்தமந்திரமும், புருஷனுடைய பாவங்களுக்காக மூன்றுசெபமாலையும் அவள்தானேசொல்லும்படியாக அபராதமிட்டார். இதென்ன சுவாமி, "அவரல்லவோ பாவஞ்செய்தவர்; அவர்தானேபரிகரிக்கவேண்டும்" என்று அவள் குருவானவருக்குச்சொன்னாள். "நீதானே பாவசங்கீர்த்தனத்தில் அறிக்கையிட்டாய். பாவங்களை அறிக்கையிடுவோருக்குத்தானே அபராதம் கொடுப்பது வழக்கம். இனிமேல் உனது சொந்தப்பாவங்களைமாத்திரம் அறிக்கையிடுவது போதும்என்று இருந்துவிடு" என்று குருவானவர் அவளுக்குப் புத்திசொன்னார். (Sherer)

### "பாவசங்கீர்த்தனம் பூரணம்ஆகல் வேண்டும்"

நியாயமான ஆத்துமசோதனை செய்தபிற்பாடு நீகண்டுபிடித்த சகலசாவான பாவங்களையும், அவற்றின்தொகையையும் வகையையும் சொல்லவேண்டும். வேணுமென்று பாவசங்கீர்த்தனத்தில் சாவானபாவத்தை ஒளிப்பவர்களுக்கு உண்டாகும் ஆபத்துகள் என்ன?

a. இவர்கள்எப்போதும் மனஅமரிக்கையில்லாது சீவிப்பார்கள். "பாவசங்கீர்த்தனத்தில் ஒருசாவானபாவத்தை ஒளிப்பவன் தனக்குள் ஒருமறியல்வீட்டைக் கொணடுதிரிகிறான். அம்மட்டா! நரகத்தைத் தன்னுள்ளத்தில் கொண்டுதிரிகிறான்" (அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர்)

b. மனஸ்தாபம் இல்லாதுமரிக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள் நான் இந்தப்பாவத்தைப் பையமெல்லப் பிறகுபிறகு அறிவிப்பேன் என்கிறாய். உனது பாவங்களைப்பலவாகப்பெருக்கிய பிறகு சொல்லத் துணிவாயா? பிறகுபிறகு சொல்வேன்; மரணப்படுக்கையில் கட்டாயம்அறிவிப்பேன் என்கிறாய். தேவதுரோகமும், வெட்கத்துக்குரிய கிரிகைகளும்நிறைந்த சீவியகாலம் முழுவதையும் வெளிப்படுத்த அப்போது உனக்குத் துணிவுவருமா? ஒருவேளை நீ விரும்பியகுருவானவர் உனக்குக்கிடையாதுபோவார். உனது

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபசுகால நிருபம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

விலை நாலு தடவை சந்திக்க வேண்டும்.

(3) கோவிலைச் சந்திக்கும் போது 5 பரமண்டல மந்திரம், 5 பிரியதத்த மந்திரம், 5 திரித்துவ தோத்திரம் சொல்லவேண்டும்.

(4) ஒரு பரமண்டலமந்திரமும், ஒருபிரியதத்த மந்திரமும், ஒரு திரித்துவ தோத்திரமும் பாப்பானவர் கருத்துகளுக்காக.

(5) விசுவாச மந்திரமும், மூன்று பிரியதத்த மந்திரமும், மூன்றுவிசை 'சமாதானத்தின் இராக்கினியே! எங்களுக்காகவேண்டிக்கொள்ளும். கடைசியாக, கிருபை தயாபத்துமந்திரம். இஷ்டப்பட்டவர்கள் பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதர் இயற்றிய ஜூபிலிச் செபமும் சொல்லலாம். உரோமாபுரிக்குச் சென்று ஜூபிலிப்பலன் அடைந்தவர்கள் தங்களுக்காக அல்ல, உத்தரிக்கிற ஆத்துமாக்களின் நன்மைக்காகப் பலன் அடையலாம்.

ஜூபிலி வருஷம் சர்வேசுரனுடைய அளவறுக்கப்படாத இரக்கத்தின்காலம்; வரப்பிரசாதம் சரமாரியாய்ப்பொழியும் அனுக்கிரகத்தின் காலம்; பழையஏற்பாட்டின் காலத்தில் ஜூபிலி வருஷங்களில் கிருஷிகளுக்கும், வயல்களுக்கும் இளைப்பாற்றிகொடுக்க வேண்டுமென்றும், கடன்பட்டவர்களுக்குக் கடனை மன்னிக்க வேண்டுமென்றும், அடிமைகளுக்குச் சுவாதீனம் அளிக்கவேண்டுமென்றும், பிதிரார்ச்சித சொத்தை இழந்தவர்களுக்குச் சுதந்திரபாத்தியத்தை மீண்டும்கொடுக்க வேண்டுமென்றும் சட்டதிட்டங்கள் ஏற்பட்டிருந்தன. (லேவியர் XXV—XXVII.)

அதுபோலவே, பாவத்தினல் பசாசுக்கு அடிமைப்பட்டவர்களும், ஞானநன்மைகளை இழந்தவர்களும் இந்தப்புனிதவருஷத்தில் நல்லபாவசங்கீர்த்தனம் செய்து, தங்கள் சீவியத்தைச் சீர்திருத்தி, சர்வேசுரனுடைய பிள்ளைக்குரிய சுதந்தரத்தையும், மோட்சசம்பாவனைக்குரிய ஞானதிரவியங்களையும் பெறக்கடவார்கள்.

அன்பார்ந்த சகோதரர்களே! பிள்ளைகளே! பரிசுத்த பாப்பரசருடைய விருப்பத்துக்கு இணங்கி, இந்தவருஷம் ஒவ்வொரு பங்கிலும் பொதுத்தியானம்வைத்துப் பங்குக்கிறீஸ்துவர்கள் அனைவரும் அதில் பங்கெடுத்துப் புனிதவருஷத்தின் ஜூபிலிப்பலனை ஏராளமாய் அடைவார்களாக.

இரக்கம்நிறைந்த யேசுவின் திருஇருதயமும், மரியாயின் மாசற்ற இருதயமும், நல்லதந்தை அர்ச். சூசையப்பரும், மிஷன் நாடுகளுக்குவிசேஷபாதுகாவலர்களான அர்ச். சவேரியார், அர்ச். குழந்தை யேசு தெரேசம்மாளும் உங்கள் அனைவரையும், உங்கள் குடும்பங்களையும், உங்கள் தொழில் முயற்சிகளையும் சம்பூரணமாய் ஆசீர்வதிப்பார்களாக.

✠ கபிரியேல் பிரான்சிஸ் தியூர்சியுஸ் ரோச்ஆண்டவர்
தூத்துக்குடி மேற்றிராணியார்.

### WANTED

Printer and Compositor (English) apply Rector, St. Patrick's College, Jaffna.

## நானு சங்கதிகள்

—ரைபஸ் எனப்படும் பயங்கர கொள்ளைச்சுரத்தைக் குணமாக்குவதற்கென்று முதன்முதலாக 'ரெருமிஸின்' எனப்படும் பலிதமான ஓர்புதிய மருந்து கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருப்பதாய்க் கெய்ரோநகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இதனைப் பரிசோதனைசெய்ததில் இந்தக்கொள்ளைச்சுரத்துக்கு மிகச்சிறந்த ஒரு மருந்து இதுவென அறிவிக்கப்படுகிறது.

—ஒருவரின் இருதயத்திலே சத்திரவைத்தியஞ்செய்யும்போது, அவரது இருதயமும் சுவாசப்பையும் செய்யும் வேலைகளைத்தொடர்ந்து செய்துகொண்டிருக்கக்கூடியகண்ணுடிக்கருவிஒன்று அமெரிக்க ஐக்கியதேச அந்தியோக் கல்லூரியிலே கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்புதியகருவி நாலுருத்தலுக்குக்குறைவான நிறையுடையதாகும்.

—இருமோட்டர் சைக்கிள்களிலே உலகத்தைச்சுற்றிவருமாறு லண்டனிலிருந்து சமீபத்திலே புறப்பட்டிருக்கும் திரு. ஜோன் லெனெக்ஸ், திரு. ஹமில்ரன் பிளெச்சர் எனுமிருவரும் தாங்கள்செல்லும் வழியிலே கொழும்புகண்டும் போகவிருக்கின்றார்கள். இவர்கள் உலகத்தைச் சுற்றி 33,000 மைல்தூரம் பிரயாணஞ்செய்யவிருக்கின்றார்கள்.

—அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின்கீழ் நிலத்தைஅகழ்ந்து பத்து வருடகாலமாக நிகழ்த்திய ஆராய்ச்சியின் முடிவுகள்பற்றிய சரித்திரசம்பவமானது பரிசுத்தபிதாவின் திருமகுடதாரண பன்னிரண்டாவது வருட நிறைவுவிழாவாகிய வருகிற பங்குனி மாதம் 12-ந்திகதியன்று வத்திக்கானிலே ஓர்புத்தகரூபமாக வெளியிடப்படவிருக்கிறது.

—யூதர்களின் இஸ்ரேயேல்நாட்டிலே தற்போது நாற்பதினுயிரம் கிறீஸ்தவர்கள்வரையில் இருப்பதாக "ஜெருசலேம் போஸ்ற்" எனும் பத்திரிகையில் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. அதாவது அங்குவசிக்கும் யூதர்கள்அல்லாத முழுச்சனங்களிலும் கிறீஸ்தவர்கள் ஏறக்குறைய நாலில்ஒருபங்கு போரவர். நாற்பதினுயிரம் கிறீஸ்தவர்களிலும் இருபதினுயிரம்பேர் கத்தோலிக்கரே.

—தூரகிழக்கிலுள்ள ஒரேயொரு கத்தோலிக்கநாடாகிய பிலிப்பைன்ஸ் தீவுகளில்வசித்துவரும் 1 கோடியே 80 லட்சம் சனங்களில் ஏறக்குறைய 1 கோடியே 60 லட்சம் பேரும் கத்தோலிக்கரே. ஆனால், இவர்கள் மத்தியில் தொண்டாற்றிவருகின்ற குருமார் 2,053 பேரே. அதாவது ஒவ்வோர் எண்ணுயிரம்பேருக்கும் ஒரு குருவானவர்வீதம் இருந்துவருகின்றார்கள்.

### TENDER NOTICE

Tenders will be received by the Govt. Agent, N. P., Jaffna up to 12 noon on Friday, 16th March, 1951 for the supply of Naar Baskets, Ola Mats, Palmyrah Olas, Vadali Olas, Palmyrah Posts, Palmyrah Stalks, Alampals and Cadjans to the Jaffna Salterns. The materials should be supplied whenever required udring the period 15th April to 30th November, 1951.

For further particulars application should be made to the Govt. Agent, N. P., Jaffna.

(M. Ramalingam)
for Govt. Agent, N. P.

The Kachcheri, Jaffna,
February 23, 1951.




Osram
REGD. TRADE MARK

ஒஸ்றம்
அற்புதமான லாம்பு
கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.
வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.
கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லின்டுலா.

## ஊதாரிப்பிள்ளை

( 7-ம் பக்கத்தொடர்ச்சி )

அந்தரங்க சீவியம்முழுவதையும் அறிவிக்க உனக்கு வெறுப்பாய் இருக்கும். ஒரு குருவானவர் தானே உனக்குக்கிடைக்கலாம். அல்லாமலும் மரணம் சடுதியாக வந்தால் என்னசெய்வாய்?

(தொடரும்)

—சீனவிலே தற்போது 4,056 சீன மாணவர்கள் குருப்பட்டத்துக்குப் படித்துவருவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் 3,629 பேர் அங்குள்ள மேற்றிராசனகுருமடங்களிலும், ஏனையோர் பலசந்நியாச சபைகளுக்குச்சேர்ந்த குருமடங்களிலும் படித்துவருகின்றார்கள். அமெரிக்கஐக்கியதேசம், பிலிப்பைன்ஸ், இத்தாலி, கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம்முதலாம் தேசங்களிலுள்ள குருமடங்களிலே 427 சீன மாணவர்கள் குருப்பட்டத்துக்குப் படிக்கின்றார்கள்.

—அமெரிக்க ஐக்கியதேசம் தற்போது இருபகுதியாக யுத்தத்துக்குத் தயார்செய்துவருகிறது. முதலாவதாக, பிரதமயுத்தம் ஒன்றுக்கு அமெரிக்க படைகளை ஆயத்தஞ்செய்வதற்கான யுத்தோபகரணங்களைச் செய்கின்றது. இரண்டாவதாக உலகமுழுவதிலுமுள்ள தனதுஆயுதபலங்களுக்குவேண்டிய மிகப்பெருந்தொகையான சிறந்த யுத்தோபகரணங்களை அனுப்பிவைக்க வசதிபண்ணுகிறது.



## 4-வது வருஷ மரண ஞாபகம்

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் கடைசியாக கிறேற் வெஸ்ரேன் புகையிரதஸ்தான அதிபராகக் கடமையாற்றிய மாதகல் S. A. நாதன் அவர்கள் தமது 45-வது பிராயத்தில் பரலோகபிராப்தியான 4-வது வருஷம் மார்ச் மாதம் 6-ந்தேதியோடு பூர்த்தியாகின்றது. அன்று காலை மாதகல் சந்தொம்மையப்போஸ்தலர் ஆலயத்தில் அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக்கண்ணுறும் குருக்கள், சந்நியாசிகள், கன்னியர், இனபந்துக்கள், சிநேகிதர் அவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வார்களாக!

ஆ. மரியநாயகி
மாதகல்

திவ்வியபூசையின் மகத்துவம்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.
பிரதி விலை ரூபா 2-50

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 1 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org